கனடாவிலிருந்து வெளிவரும் கலைஇலக்கிய காலாண்டு இதழ்

# நான்காவது பரிமாணம்



# NANKAVATHU PARIMANAM

ART & LITERARY QUARTERLY PUBLISHED IN CANADA

11

ஒக்டோபர் 1993 OCTOBER

# பொறிநுட்பம்

# PORINUDPAM

**வாகனங்கள் திருத்தும் நிலையம்**

* பெற்றோல், டீசல் வாகனங்களுக்கான சகலவிதமான இயந்திர, மின்சார திருத்த வேலைகள்
* வாகனங்களுக்கான அத்தாட்சிப்பத்திரங்கள் வழங்குதல் (Vehicle Inspected & Certified)
* கொம்பியூட்டர் வசதியுடனான திருத்த வேலைகள்
* Alternators & Starting Motors rebuilt செய்யப்பட்டு நியாயமான விலையில் விற்பனை செய்தல்
* இறக்குமதி செய்யப்பட்ட, உள்ளூர் வாகனங்களின் விசேட நிபுணத்துவம்
* பழைய கார்கள் வாங்குதல், விற்பனை செய்தல்

435 BOWES ROAD, UNIT 5
CONCORD, ONT.
L4K 4A4
Tel: (416) 738 8360

(KEELE & HWY 7)

நான்காவது

# பரிமாணம்

ஆசிரியர்

க. நவம்



## உள்ளே

ஒக்டோபர் 1993 OCTOBER


சோலைக்கிளி

என். சண்முகலிங்கன்

ராஜன்

மாயவன்

ப. திருநாவுக்கரசு

கலைச் செல்வன்

வி. கந்தவனம்

தெணியான்

சிறீசுக்கந்தராசா

மீரா சுப்ரமணய்ம்

சிவகுமார் செல்லத்துரை

செல்வி

சபா வசந்தன்

சக்கரவர்த்தி


நான்காவது பரிமாணம் உங்கள் ஆக்கங்களையும் அபிப்பிராயங்களையும் தரமறிந்து பிரசுரிக்கும். அனுப்பிவையுங்கள். உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றையும் அறியத்தாருங்கள். அநாமதேய ஆக்கங்களுக்கு நா. ப. இடமளிக்கமாட்டாது.


Nankavathu
**PARIMANAM**
1565 Jane St
P.O. Box 34515
Toronto, Ontario
Canada M9N 1R0

Fax : (416) 249 3516

## ஆசிரிய தலையங்கம்

இன்று தமிழில் எழுத வருவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்த வண்ணமிருக்கிறது. புதுப்புதுப் புத்தகங்கள், சஞ்சிகைகள், செய்திப் பத்திரிகைகள் என்பனவும் நிறையவே தமிழில் வெள[illegible]து கொண்டிருக்கின்றன.

கனடாவிலும் ஏராளம் பத்திரிகைகள் இன்று பிரசுர[illegible] இங்கு கோயில் திறப்பதற்கு ஈடாகவும் இணையாகவும் நின்று போட்டி போடக்கூடிய இன்னொரு திருப்பணி இருக்குமென்றால், நிச்சயமாக அது பத்திரிகை வெளியிடுதல் தான் என்றாகிவிட்டது!

பத்திரிகைகளின் தொகை அதிகரித்ததனால், அவற்றில் எழுதும் வாய்ப்புக்களை வசதியாகப் பெற்று, 'ஓகோ' என்று எழுதி ஜமாய்த்துக் கொண்டிருக்கும் எழுத்தாளர்களின் எண்ணிக்கையும் தினம் தினம் பெருக்கல் விருத்தியில் பல்கிப் பெருகியபடி! இது சந்தோஷப்பட வேண்டிய விஷயம்!

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க விரும்பாதான் தமிழன்.' அதனால் தான் ஓடி ஓடிக் கோயில் திறக்கிறான் என்று—ஒரு கதைக்கு—இப்போதைக்கு எடுத்துக்கொள்வோமே! ஆனால் எழுத்தை நம்பிய எம்மவரின் கப்பல் எங்காவது - எப்போதாவது மிதந்து கரையேறியதாகக் கட்டுக் கதையாவது கேள்விப்பட்டதுண்டா? இருக்க முடியாதே! ஆயினும், இந்த எழுத்து என்ற ஓட்டைக் கப்பலை நாடி இன்னமும் நாங்கள் எல்லோரும் 'துண்டைக் காணோம் துணியைக் காணோம்' என்றவாறு அள்ளுண்டோடிக் கொண்டிருக்கிறோம். இது ஆச்சரியமாக இல்லை?

'ஆத்ம திருப்தியோ, இயல்பாகவே முகை வெடித்து வெளிப்படும் படைப்பிலக்கிய முனைப்போ, மொழிக்கு - இனத்துக்கு - சமூகத்துக்கு சேவைசெய்ய வேண்டும் என்ற சேவா அபிமான உணர்வோ, மனித நேயமோ ....' இன்னும் என்னென்ன உன்னத நோக்கங்கள் காலா காலமாகச் சொல்லப்பட்டு வந்துள்ளனவோ அவற்றுள் ஏதாவது ஒன்றோ அன்றிப் பலவோ அல்லது எல்லாமோ இங்கு முதன்மைப்படுவதாகத் தெரியவில்லை.

பதிலாக, 'பத்திரிகையில் பெயர் வரும் - படம் வரும்; வீடு தேடிப் புகழ் வரும்; விருந்துகள், விழாக்கள், வீதிகளிலும்கூட விசேட 'பார்வைகள்' படரும் - பாராட்டுக்கள் வரும் ....' என்றவாறெல்லாம் குறுக்கு வழியில் பிரபலம் தேடிக்கொள்ளும் சிறுபிள்ளைத்தனமான ஆசை குறிப்பாகவும், வேறு சில குறுகிய நோக்கங்கள் பொதுவாகவும் தான், பெரும்பாலும் எமக்குள் இந்த ஆரவாரங்களுக்குக் காரணங்களோ என்று, எமது இன்றைய எழுத்துலக நடப்புக்களை அவதானிக்கும்போது எண்ணத் தோன்றுகிறது. (இது மட்டும் உண்மையாய் இருந்துவிடக் கூடாதென்று சம்பந்தப்பட்ட சகலரும் பிரார்த்திப்போமாக!) இது உண்மையாயின் மிகவும் வருந்தத்தக்க விஷயம்!

புகலிடப் படைப்புக்கள் நவீன தமிழ் இலக்கியத்துக்குப் புதிய பரிமாணம் சேர்க்க வேண்டும்; அறிவியல் அடிப்படையில் புகலிட சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டுத்துறைகளை அணுகி ஆராய்ந்து, புதிய பகைப்புலத்தின் அறுவடைகளாக அவை விளைய வேண்டும்; இன்றைய காலத்தின் சாசனமாக என்றும் அவை அமையவேண்டும்; புதிய சமூய தரிசனத்துக்கு அவை உதவவேண்டும். இத்தகைய படைப்புக்களையே புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் எழுத்தாளர்கள் படைக்கவேண்டும்; பத்திரிகைகளும் தாங்கி வெளிவர வேண்டும். இம்மாதிரியான புதிய மாற்றங்கள் எதுவுமே இடம்பெறாவிடத்து, புதிய படைப்பாளிகளுக்கும் புதிய களங்களுக்கும் என்னதான் அப்படி ஒரு அவசர தேவையோ? வெறுமனே பத்தொடு பதினொன்றாய் வந்து போகவோ?

தமக்குத் தமக்கெனப் புகழும் பெருமையும் சேர்ப்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொள்வதை விடுத்து, நமக்கும், நமது மொழிக்கும், நமது சமூகத்துக்கும் ஏன் முழு மானுடத்துக்கும் புதுமையும்—செழுமையும் வேண்டுமாயின் பெருமையும்—சேர்க்கும் முயற்சிகளே இன்றைய தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, நாம் செயற்பட்டாக வேண்டும்.

இல்லையேல் இவ்வாறான எழுத்துலக யாத்திரைகளின் போது இடையிடையே, "எவடம்,எவடம்.....எவடம்,எவடம்...." என்ற கேள்வி அவ்வப்போது எழும்! அப்போதெல்லாம் மீண்டும், மீண்டும் "புங்கடி, புளியடி.... புங்கடி, புளியடி..." என்ற பதில்மட்டுமே காதில் வந்து விழும்!



*கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. படைப்புக்கள் அனைத்தும் நான்காவது பரிமாணத்தின் கருத்தைததான் பிரதிபலிக்கின்றன என்பதற்கில்லை.*

# பைத்தியக்கார எருமைமாடு

இலங்கையிலிருந்து

எவரின் தலையிலும் எவரும் ஏறிநிற்க
நான் அனுமதிக்கமாட்டேன்.
காகங்களின் எச்சம்
வாசம்தான்!
அதற்காக;
என் தோளைக் கொடுப்பேனா!
என்றெல்லாம் அந்த எந்த எருமைமாடு
பைத்தியத்தில் கத்தியது.

அந்த எருமைமாட்டிற்குச்
சரியான பைத்தியம்.
குணமாக்க முடியாத அளவுக்கு
குணக்கேடு.

நான், தண்ணீரைக் கொதிக்கவைத்து
ஆறவைத்து வடித்தேதான்
பருகுகிறேன் என்று
அந்த எருமைமாடுதான்,
சேற்றைக் குடித்தபடி சொல்லியது.
எவரின் வயலுக்குள்ளும்
எவரும் நுழைவது
பூரணமாகவே தடை
என்று சட்டம் இயற்றியது.

நல்ல உச்சி வெயில்
அந்த எருமைமாட்டின் பைத்தியம்
இன்னும் உரத்திருக்க வேண்டும்;
சவர்க்காரம் போட்டே குளித்தது சேற்றில்
அந்த எருமைமாடு.
பூக்களால் தலையைத் துடைத்தது.

அசிங்கமானவர்களை எனக்குப் பிடிக்காது
என்று சொல்லியபடியே துரத்தியது
அந்த எருமைமாடு
வெண் கொக்குகளை.

அந்த எருமைமாட்டின் படங்களும் உரைகளும்
நாளைய பத்திரிகைகளில் வரலாம்!

சோலைக்கிளி

# பதியெழு அறியா...

இலங்கையிலிருந்து



அப்பாவின் அழுகை விக்கல் இன்னமும் ஓயவில்லை. ஆறுதல் படுத்தலாம் என நினைத்தாலும், அது அழுகையை மீண்டும் வெடிக்கச் செய்யலாம் என்ற அச்சம்.

காதுகளைப் பொத்திக்கொண்டு படுத்துப் பார்க்கிறேன். இப்பொழுது, காலையிலிருந்து நடந்த சம்பவங்கள், சத்தங்கள் எல்லாம் உள்ளே ஓங்கி ஒலிக்கின்ற உணர்வு ஒலி; ஒளி; உறக்கம் இல்லாத மனத்திரை விரிவு.

அப்பாவின் விக்கல் ஒலியிலிருந்து தப்பிக்கொள்ள என்ன செய்யலாம்? இப்படியான என் உணர்வு அழுத்தங்களிடை எனக்குக் கைகொடுப்பன கவிதை, கதை....

இன்றைய அழுத்தல்கள் கவிதைக்குள் அடங்காதன...

கதையாகவே எழுதும் முடிவு மேலெழுகிறது. நல்ல வேளையாக மேசையில் அரிக்கன் லாம்பு அனுங்கிக் கொண்டிருந்தது. புதிய வீட்டில் இரவிரவாக 'லைற்' போட்டு புதினம் காட்டாமல் இருக்கவென்று முன்னேற்பாடாய் கொழுத்தி வைத்தது, கை கொடுக்கிறது. இல்லையென்றால் கள்ள நித்திரை கொள்ளும் எல்லோரும் எழுந்துவிடுவார்கள்.

வழமையாக கதையை எழுதிவிட்டே தலைப்பை இடும் நான், இன்று தலைப்பை இட்டு, எழுதத் தொடங்குகின்றேன்.

கருவிலே உயிர்த்த தலைப்பு;

பதியெழு அறியா...

"பதியெழு அறியாப் பழங்குடி வாழ்க்கை" என்ற சிலப்பதிகாரத்து அடிகளுக்கு அர்த்தம் சொல்லும் கதை தொடரும்...

∴ ∴ ∴

எத்தனை தலைமுறை கண்ட எங்கள் ஊரே வெறிச்சோடத் தொடங்கியது. திருமண உறவில்கூட வெளியே சொல்ல விரும்பாத ஊர்ப்பிடிப்பு தளர்கிறது. இரண்டு கிழமையாக தொடர்ந்து விழும் ஷெல் தாக்குதல் ஊரையே கலக்கிவிட்டது. பாதுகாப்பு வலயத் தொடுகோட்டில் இருந்தது எங்கள் வீடு, அவ்வளவு பயமில்லை என இருந்த இருப்பிலும் இடி விழுந்தது. சென்ற வாரம் உள்ளே நுழைந்து, அட்டகாசம் செய்து சென்ற சம்பவத்தின் பின் தான் ஊர் வெறிக்கும் இந்த நிலமை.

பக்கத்து வீட்டிலும் கட்டில் கழற்றுகின்ற சத்தம்...

"அண்ணை, ஆசையம்மாவையும் போகப்

**என். சண்முகலிங்கன்**

போயினம்" தங்கச்சியின் கண்டுபிடிப்பு "அப்ப, நாங்கள்..." என்கின்ற மாதிரி பார்க்கிறாள் அவள்" "அப்ப என்னவாம்..." "எங்களை எங்கையேன் போகட்டாம். தான் வீட்டை விட்டிட்டு வரமாட்டாராம்"
எப்படித் தனியப் போறது?
எழுந்து எனது அறைக்குள் 'ஒழித்துக்' கொள்ளுகின்றேன்.
'ரேப்ரெக்கோடரை' அழுத்துகின்றேன்.
"தென் தெனனே... தென்தெனனே...."
எங்கள் வீரபத்திரர் வசந்தன் ஒலிப்பதிவு நாடா– இதற்குமுன் புரியாத அழகும் செழுமையும் துலங்கும் உணர்விடை, எங்கள் ஊரைப் பாடும் அந்த வசந்தனில் என்னை மறக்க முயலுவேன்...
பக்கத்து வீட்டுச் சாமான்களுடன் அவர்கள் 'லொறி' உறுமி மறையும் சத்தம். அந்த ஒலியின் மறைவில் ஒரு பயங்கரச் சத்தம். குண்டு– தொடர்ந்து வெடிக்கும் குண்டுகள். ஊரில் மிஞ்சிய அயல் குழந்தைகள், பெண்கள் ஓலங்கள்....
"ஆமி வருகுதாம்...."
ஓட்டம்; ஒழிதல்....
'காக்க காக்க கனக வேல் காக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க' அம்மாவின் குரலில் அச்சம் மறைக்கும் கந்த சஷ்டி கவசம்.
எந்தப் பக்கம் சத்தம்? இந்த அவலத்திடையும் நானும் தங்கச்சியும் புள்ளி விபரக் கணக்கெடுப்பு.
"நாங்களும் எங்கையேன் போவம் தம்பி..."
"அப்பாவாலை ஓட ஏலுமே..."
"அப்ப நீ ஆவது ஓடித்தப்பு....."
அம்மாவும் நானும் எங்களுக்குள்.
அப்பா மட்டும் கட்டிலிலிருந்து அசையவேயில்லை. அவர் முகத்தில் எங்களது போல பயத்தின் சுவடுகள் இல்லை. ஆனால் கவலையின் சிந்தனை.
தாக்குதல்; எதிர்த்தாக்குதல்–
கவச வாகனங்கள் பொடிபட, அசுரர்கள் ஓயிருக்க வேண்டும்.
மீண்டும் அமைதி.
ஒழுங்கையில் மனிதகுரல்கள் சில.
'ஆறாத்த வயிரவர் கோயிலடியில், குழந்தையோட நிண்ட அந்த இளந்தாரிப் பெடியனை கூப்பிட்டுட்டு சுட்டுப் போட்டாங்களாம்'
'யாக்கோவின்ரை மனிசி கும்பிட கும்பிட வீட்டுக்குள்ளை உள்ளிட்டு சுட்டிருக்கிறாங்கள்'
"மாலடியிலை தானாம் பொடியளின்ரை கண்ணி. அந்த வயிறன் மாஸ்டர் வயரை அறுத்துப் போட்டானாம். இல்லையெண்டால் ஆமியை அதிலையே திருப்பியிருப்பாங்கள்...."
'நாங்கள் வீட்டக்குள் கிடந்தது எவ்வளவு பேய்த்தனம்' நானும் தங்கச்சியும் எங்களுக்குள்.
வந்த மற்றைய செய்தி எங்கள் யோசனையையும் அர்த்தமிழக்கச் செய்யும்.
"தோட்டங்களுக்காலை ஓடின சனங்களிலையும் மூண்டுபேர், சாத்தனாவத்தையடியிலை மேலையிருந்து சுட்டுச் சரியாம்..."
'எங்கேயும் ஆபத்து நிகழ்தகவு ஒன்றதானோ!'
மீண்டும் நானும் தங்கச்சியும் தான்.
'சூரபத்மாவைத் துணித்தகையதனால்.... சின்னக்குழந்தை சேவடி போற்றி' சாமி அறையிலிருந்து அம்மாதான்; முன்னைய

அச்சம், அவலம் தணிந்து நன்றி கனியும் குரலில்.

அப்பாவைப் பார்த்தேன்; அவரின் பார்வையும் வழமைக்குத் திரும்பி இருந்தது.

கட்டிலில் போய் இருந்து.

'என்னப்பா, பயந்தட்டியளே...' என்று கேட்டேன்.

'சாய்..' என்ற தலையாட்டலுடன் பதில்.

பிறகு மௌனம்.

அப்பாவின் இந்த மௌனத்தின் பொருள் எனக்குப் புரியும். பேச்சுக் கொடுத்தால், காலையில் நடந்த குண்டுச் சம்பவங்களையும் சொல்லி, வீட்டை விட்டு வெளிக்கிடும் கதைக்கு நான் மீண்டும் சென்று விடலாம் என்பதனாலான கள்ள தப்புதலே, இந்த மௌளனம். கடந்த இரண்டு கிழமை அனுபவத்தில், பிரச்சனை குறையுமட்டும் இந்த ஆபத்து வலயத்திலிருந்து கொஞ்சம் தள்ளி சில நாள் இருந்து வருவோம் என்பதில்,

அப்பாவை இணங்க வைக்க படாதபாடுபட்டு, தோல்வியில் நான் கண்டு பிடித்தது இந்த மௌனார்த்தம்.

அப்பாவின் கையைப் பிடித்தபடி இந்த மௌனத்தைக் குலைக்கும் முயற்சியின் கணங்களிடை பக்கத்து வீட்டு சின்னத்தங்கம் ஆச்சியின் ஒப்பாரி ஓங்குகிறது.

'அண்ணை, ஆச்சியை விட்டிட்டு சாமான்களைத்தான் கொண்டு போயிருக்கிறாங்கள்...'

'ஒருவேளை அடுத்த 'றிப்பில்' சான்ஸ் கிடைக்கலாம்'

அப்படி ஏதும் 'சான்ஸ்' இல்லையென்பது மாதிரி அவளின் ஒப்பாரிப் பாடல் அடிகள்.

அப்பாவுக்கும் விடயம் விளங்காமலில்லை; இருந்தாலும் விடயத்தை திசைதிருப்பும் நிலையில், 'ஏதும் புத்தகம் தா வாசிக்க...' என்கின்றார்.

நடந்த அழுத்தல்கள் போதாதென்று நானும் சத்தம் போடக் கூடாது' என்ற தீர்மானத்துடன் புத்தக அலுமாரிக்குள் துளாவி ஒன்றை எடுக்கின்றேன்.

இந்திரா பார்த்தசாரதியின் 'சுதந்திர பூமி' அப்பா சுதந்திர பூமியில் மெள்ள நுழைகின்றார்....

நடந்த சம்பவங்களை மறந்து அல்லது மறக்க முயன்று அவரவர் தத்தம் கடமைகளுக்குள் நுழைய முயல்கின்றோம்.

காலையில் குடித்த தேநீருக்குப் பிறகு ஒண்டுமில்லை;

அடுப்படிக்குச் செல்கிறாள் அம்மா. தங்கச்சி ஏதோ மூலிகையைத் தேடிக் கொண்டிருந்தாள். ஆயுள் வேதம்.

வருகிற கிழமை சோதனை அவளுக்கு.

"அண்ணை... இங்கை பார் 'ஷெல்' துண்டு.... " மூலிகைக்குப் பதில், 'ஷெல்' துண்டுகளுடன் ஓடிவந்தாள்...

"இது எங்களிலை பட்டிருந்தால்..."

"சரி அம்மாவுக்குக் காட்டாமல், பத்திரமாய் இதைக்கொண்டுபோய்வை"

வரலாற்று ஆதாரங்களைப் பேணும் முயற்சியும் இந்த அவலத்திடை நானும் எனது புத்தகம், நோட்ஸினுள் மெள்ள நுழைய முயன்றேன்.

'இனப்பிரச்சினையின் சமூக தாக்கங்கள்'; இன்று எப்படியும் 'கம்பஸ்' போகவேண்டும். நேற்று எடுத்திருக்க வேண்டிய லெக்ஷர்'... இதைப் படிப்பிக்க இந்த அமெரிக்கன்

புத்தகத்தையா படிக்க வேண்டும்...
நேற்றைய சம்பவ மீட்டல்களுடன் விரிவுரையைத் தயார் செய்து கொள்கின்றேன்.
வீட்டைவிட்டுக் கிளம்புவதில் அப்பா காட்டும் தயக்கம், எங்கள் வீட்டில், ஊரில் அவர் கொண்ட பிணைப்பு....
எனது சமூக உளவியல் அறிவின் துணையுடன் புரிகின்றன... 'அப்பாவின் இந்த வீட்டுப்பற்று உணர்த்தும் அர்த்தங்கள் ஆழமானவைதான்...'
திடீரென,
'சடசடசட' என சுடும் ஒலி, என் சிந்தையை நிறுத்தும். "ஓடி வாங்கோ அப்பா...." அப்பாவைப் பிடித்து வந்து குசினி புகைக் கூண்டின் கீழ் தள்ளி... நாங்களும் உள்ளே அவிகின்றோம். இன்று வான்வெளித் தாக்குதல் அனுபவம். ஓட்டைத் துளைத்து எங்கள் குசினிக்குள்ளும் ஒன்றிரண்டு குண்டுத்துண்டுகள்.
அந்த ராட்சத ஹெலியின் அக்கிரமம் முடிய அரை மணித்தியாலம் வரையில் பிடிக்கிறது. புகைக் கூண்டின் கீழ் 'கனன்ற' பொழுதிடை, எப்படியும் வீட்டைவிட்டு நாமும் கிளம்ப வேண்டும் என்ற முடிவு மேலும் உறுதி பெறுகிறது. அப்பாவைத்தான் எப்படிச் சமாதானப் படுத்துவது... சம்திக்க வைப்பது....
இந்த நேரத்தில் தான் நம் தமிழ் சினிமா அற்புதமாய் திடீரென 'கேற்றை' திறந்தபடி அக்கா வருகின்றாள். சொல்லாமல் கொள்ளாமல், அதுவும் இந்த ஆபத்து வேளையில், மட்டக்களப்பிலிருந்து; எங்கள் ஆச்சர்யத்தை விடுவித்து அவளே பேசினாள்....
"ஊர்ப்பக்கம் பிரச்சனை மோசம் எண்டு கேள்விப்பட்டன், அங்கை நிம்மதியாய் வேலை செய்ய முயவில்லை, ஒரு கிழமை லீவைப் போட்டிட்டு வந்திட்டன்...."
"இந்த சூடுகளுக்காலை எப்படிப் பிள்ளை வாறாய்..." அப்பாதான் கேட்டது.
"சந்தியில் வந்து இறங்கினால் பஸ் இல்லை; நடந்து தான் வந்தன். வரயுக்கைதான் ஹெலி சூடு... வெள்ளை வாய்க்காலுக்குள்ளை கிடந்ததுதான்.
ஹெலி போக எழும்பிவாறன்....!"
"விசர்ப் பிள்ளை, இந்தப் பிரச்சனையுக்கை வந்திருக்கிறாய்" வழமைபோல் பிள்ளைக்குப் புத்தி சொல்லும் அப்பா.
"சரிசரி உடுப்பை மாத்து பிள்ளை.... தேத்தண்ணி...." அப்பாவின் இயல்பான உபசரிப்பு.
"தேத்தண்ணிக்கு இப்ப அவசரம் இல்லை.. நாங்கள் இப்ப வெளிக்கிடுறம்..."
எனக்கு விடயம் விளங்கிவிட்டது. அப்பாவுக்கும் விளங்காமல் இல்லை.
'எங்கை' என்கிற மாதிரி பார்க்கிறார், அப்பா.
"ஓம் அப்பா, கொஞ்ச நாளைக்கு நீங்கள் இங்கை இருக்க ஏலாது... இப்படி அங்கையும் இங்கையும் ஓடவும் பதுங்கவும் உங்களுக்கும் ஏலாது..."
'அது ஏலும்' என்கின்ற மாதிரி ஒரு பார்வை; அப்பாதான் "தம்பிதானே பாவம் அப்பா... அவன் வேலைக்கும் போக ஏலாமல்...."

"அவனைத் தானே அங்கினை போய் இருக்கச் சொன்னனான்"
"உங்களை விட்டிட்டு அவன் எப்படி அங்கை போய் இருக்கிறது நானே இவ்வளவு தூரத்திலையிருந்து

இருக்கேலாமல் வந்திருக்கிறன்... "

மெள்ள மெள்ள இடைவினை நடக்கிறது. அக்காவின் 'புரபெசர்' மூளை, ஏற்கனவே என்னால் இளக வைக்கப்பட்ட அப்பாவின் மனதைக் கனியச் செய்திருக்க வேண்டும். தம்பிக்காகத் தற்காலிகமாக வீட்டைவிட்டுக் கிளம்பும் முடிவு ஒருமனதாக நிறைவேறுகின்றது.

திருநெல்வேலியில் வீடு பார்த்தல்; 'வான்' பிடித்தல்; சாமான் ஏற்றுதல். எல்லாம் பாதிப் பொழுதில் அவசரமவசரமாக நடந்தது.

அப்பாவுக்குத் தந்த வாக்குறுதியின்படி மிகவும் அடிப்படையான சாமான்களை மட்டும் கொண்டு செல்வது என்பதால், இந்த ஏற்றுமதி இறக்குமதி சிரமமாயமையவில்லை. பிரியாவிடை சீன்...

வீட்டோட கிளம்பும் போது 'பப்பிக்கு' விடயம் புரிந்திருக்க வேண்டும். உச்சஸ்தாயியில் குரைத்து அழுகின்றது.

"தம்பி, இதையும் கொண்டு போவமே..." அம்மாவின் ஆலோசனை.

எனக்கும் கூட மனதை நெருடினாலும் "இப்ப இந்தச் சமானுகளோட கஷ்டம் அம்மா, பிறகு வந்து பார்ப்பம்...."

ஒழுங்கை நெளிவுகள் தாண்டி வீதியில் மிதந்தபோது,

"என்னண்ணை நீங்களும் போறியளே..." சென்றிக்கு நின்ற அந்தப் பையன்தான் கேட்டது.

'மக்கள் இல்லாத சுடலைக்கா இந்தக் காவல்' என்ற மாதிரி அவன் பார்வை.

"நிலமையைப் பார்த்து இரண்டொரு கிழமையில் வந்திடுவம் தம்பி"

இதற்கு மேல் சொல்ல ஒன்றும் தெரியவில்லை.

உயிருக்காக ஓடும் அவலம், வெட்கமாகவும் இருந்தது.

அப்பாவின் உணர்வின் உயர்வு விஸ்வரூப தரிசனமாகிறது.... இந்தத் தரிசனத்தை குலைப்பதாய் அப்பாவின் 'ஓ....' என்ற அழுகுரல் எழுகிறது.

கூடவே அம்மா, அக்கா, தங்கச்சி, மூவரும் இணைந்து கொள்கின்றனர்.

எனக்குச் சத்தம் வரவில்லை. கண்ணீர் தாராளமாய் வந்தது.

பெரியையாவீட்டை, 'வான்' தாண்டும் வரை கூப்பிய அப்பாவின் கரம்...., இன்னும் நெஞ்சில் உதிரம் கொட்டும்.

அப்பாவை மட்டுமல்ல; என்னை, தங்கச்சியை வளர்த்த வீடு அது. எங்கள் வீடு கூட பின்னாலே அப்பா உழைப்பில் எழுந்தது. பெரியைய்யா வீடு எங்கள் பரம்பரை வீடு. எங்களைத் தாலாட்டிய வளைகளைத் தாங்கிய வீடு அது....

எங்கள் வீட்டை விட்டுப் புறப்படும் போது கூட வெடிக்காத அந்த அழுகை, பெரியைய்யா வீடு தாண்டும் போது அப்பாவுக்கு ஏற்பட்டதன் அர்த்தம் புரிகிறது.

"அழாதையுங்கோ அப்பா..."

அழுதபடி எல்லோரும் ஆறுதல் சொல்லும் முயற்சியின் பின், மௌன ஊர்வலமாய் எங்கள் பயணம்.

உத்தியோகபூர்வப் புள்ளிவிபரப்படி இந்த நாட்டில் 22 அகதிகள்தான் என சென்ற வாரத்தில் படித்த அந்த அரசாங்க ஆய்வறிக்கை முடிவுகள் ஒரு கணம் நினைவில் நகைத்துப் போகும்.

கடந்த ஒரு மணித்தியாலத்துக்கு முன் இருந்த கௌரவம் போக, அகதியான

# வினா?

*எல்லாம் படித்தும்*
*என்ன புரிந்தது?*
*வாழ்க்கையின் பக்கங்கள்,*
*கனமாய்த் தெரிந்தது.*
*வெட்ட வெட்ட முளைக்கிற*
*விதையில்லா, வேரில்லா,*
*தாடியைப் போல!*
*பிரச்சினைகளும், கனாக்களும்....*

**–ராஜன்**

---

அவலம் வருத்தும் என்னுடைய வருத்தத்தை வெளியில் காட்டி நிலைமையை மோசமாக்காமல் யந்திரமாய் இருக்க முயலுவேன்.....

புதிய அந்த வாடகை வீட்டில் குடியேற்ற வைபவம்.

இத்தனை அவலத்திடையும் பால் காய்ச்சிக் குடிபுகும் பண்பாட்டுச் சடங்கும் நடக்கும். எங்களுக்கு இந்தப் பால்தான் இரவுச் சாப்பாடு. இதனைக்கூட குடிக்க மறுத்த அப்பா... ஒருமாதிரி எங்களுக்காக சாஸ்திரப்படிக்கு ஒரு மிடறு குடித்ததுதான்...... அதனை விழுங்கவும் அழுகை விக்கல் விடவில்லை.

வேளைக்கே படுக்கைக்குச் சென்று விட்டோம்.

∴ ∴ ∴

அப்பாவின் ஓயாத விக்கல் ஒலியில், திடீரென ஒரு ஓங்குதல்.... துடித்தப் பதைத்து, விளக்கைத் தூண்டி, அப்பாவின் கட்டிலை நான் சேர்வதற்குள், அம்மாவின் மடியில் திடீரென அந்த விக்கலும் ஓயும்.

"அப்...பா!"

தமிழ்நாட்டிலிருந்து

## தூரத்து வானம்பாடி

# அலி சர்தார் ஜெ∴ப்ரி

இவ்வருடம் தைத்திங்கள் இரண்டாம் வாரத்தின்போது, முஸ்லீம்களுக்கெதிரான மதக் கலவரமும், அழகு நகரம் பம்பாயும் ஒரு சேரக் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்த உச்சக்கட்ட வேளையில், அப்பாவி மனிதவுயிர்களின் மரண அவஸ்தையைக் கண்ணுற்று, வெஞ்சினம் கொண்டு, தன்மனம் எரியுண்ட நிலையில் பிரபல உருதுமொழிக் கவிஞர் அலி சர்தார் ஜெப்ஃரி எழுதிய கவிதையின் தமிழாக்கம் இது. அரசயந்திரமே திக்கற்ற நிலையில் முடக்கப்பட்டிருக்க, அழகு நகரம் பம்பாய் அறவே தனது இயல்பான சுபாவத்தைத் தொலைத்துப் பரிதவித்துக் கொண்டிருந்தது. சட்டம், ஒழுங்கு ஆகியன வெறும் வெற்று வார்த்தைகளாகக் கருதப்பட்டமையினால், அவற்றை அகராதியிலிருந்து அகற்றுவதற்கேதுவான முயற்சிகள் தொடர்வதன் பிரதிபலிப்பாக, பம்பாயின் மதக்கலவரம் திகழ, ஜே. ஆர். டி. டாட்டா மற்றும் நானி பல்கிவாலா போன்ற மூத்த பிரஜைகள், அழகு நகரைச் சிதைவிலிருந்து காக்க, அவசரகாலச்சட்டப் பரகடனமே அவசியமென உய்த்துரைக்கத் தலைப்பட்ட உண்மையையும் புடம்போட்டுக் காட்டும் காலக் கண்ணாடியான இக்கவிதையானது, உருதுமொழியில் 'ஹே ராம்' என்ற மூலத் தலைப்பிலேயே எழுதப்பட்டிருந்தது. பாயும் குத்தீட்டிகளும் பறக்கும் வெடிகளும் இந்தியாவின் இதயத்தையே இயக்கமடக்கி அழித்தபோது, நெஞ்சம் வெம்பிப் பொசுங்கிய ஆத்மாவொன்றின் எண்ண வெளிப்பாடு, இக்கவிதை வெறும் உணர்வுகளின் விடுதலையையோ அல்லது மனவுளைச்சலின் மௌனகீதப் பிரகடனத்தையோ வேண்டிநிற்கவில்லை. மாறாக, பீடும் பெருமையும் உடைத்தான பாரத பூமியின் இரட்சக வாசகமாக முரசறைகின்றது.

அநீதியின் கொண்டாட்டம்
அன்று
அந்தப் பூந்தோட்டத்தில்
இன்னுமொரு புதிய நிர்வாகம்
தன்னை ஸ்திரப்படுத்த
முனைந்துகொண்டிருந்தது.
வெள்ளைப் புறாவின்
கழுத்தைச் சுற்றிய வளையத்தை
அழகுப் பூந்தோட்டமோ
தனது கதவின் பூட்டாக்கிக்கொண்டது!

நகரத்தில் நிலவிய
சட்டவொழுங்கு குறித்த வதந்தி
சுற்றுப்புறமெங்கும் தந்தி கொடுத்தது.
கோரக் கொடுங்கோலனே
இரட்சகன் ஆகிக்கொண்டதால்
சுவர்களுக்கும், கதவுகளுக்கும்
ஏன் பூட்டுக்களுக்கும் கூட
அன்று தேவையேயிருக்கவில்லை!

அங்கே
அப்பாவிகள் அனைவரும்
அவர்களின் அப்பாவித்தனத்திற்காக
அராஜகத்துடன் மரண அவஸ்தைக்குட்பட
நீதிபதியும் கூட
குற்றவாளிக்கெதிரான குற்றச்சாட்டில்
பேரின்பம் கொண்டு
பாராமுகம் காட்டிக்கொண்டார்!

நீதிமன்றில்
காட்டிக் கொடுப்பவர்கள் மாத்திரம்
நீதிபதியாக, சாட்சியாக
இன்னும் பார்வையாளர்களாகவும்
வேடம் பூண்டபோது
குத்தீட்டியும், கோடரியும்
வாளும், கத்தியுமட்டுமே
சாஸ்வதமானவையாகி
அங்கே மயான மௌனம் கலைத்தன!

காலைநேர
ஆராதனைகளின் வேளை
கசாப்புக்கடைக்காரர்களே
கௌரவ விருந்தினரானபோது
சிரச்சேதம் செய்பவர்களே
சவச்சேலை நெய்துகொள்ள
கொலையாளிகள் தான்
ஒப்புக்குப் புலம்பிக்கொண்டனர்!

பொய் முகங்களின்
சோக கீதத்தை வானம்கூட
வேண்டி எதிரொலிக்க
அநாதைகளும்
விதவைகளும் உதிர்த்தகண்ணீர்
வீணாகிப்போனது!

அவர்களினால்
தாய்மார்களும், சகோதரிகளும்
தம்கைகளை இறுகப்பிணைத்துக்கொள்ள
பின்னே
உண்மைக்காக உயிர்நீத்த
தியாகசீலர்களின் தலைகளை
குருதியில் குளித்த குத்தீட்டிகளின்
முனைகள் தாங்கிவந்தன!

அவர்கள்
பாழாக்கிக்கொண்ட
அழிவுகளுக்கிடையே
ஆனந்தக் களியாட்டத்தை
தொடர்ந்து கொண்டிருக்க
கறுப்பு இரவில்
கண்ணீர் தோய்ந்த கண்களின்
மங்கலான ஒளிர்வுமட்டும்
விட்டுவிட்டுப் பிரகாசித்து
நட்சத்திரங்களைச் சாகடித்தது!

எம் பாரதம் கண்ட
பழமைக் கனவுகளின்
கருத்து இதுதானென்றால்
இந்தப் பாவபூமியும்
நோகவைத்த பாவாத்மாக்களும்
அறவே அற்றுப்போவர்!

கனடாவிலிருந்து

—மாயவன்—

# தூரியையே ஆயுதம்!

– ப. திருநாவுக்கரசு

மிழ் தாட்டிலிருந்து



தமிழகத்தில் சமூக சிந்தனையுள்ள ஓவியர்கள் யார் இருக்கிறார்கள் என்றால் முதலில் நினைவுக்கு வருவது புகழேந்தியின் பெயர் தான். அந்தளவுக்கு சமூகத்தோடு நெருங்கிய தொடர்பும், அதை வெளிப்படுத்தும் கலைப் போராளியாகவும் அவர் இருக்கிறார்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள தும்பத்திக்கோட்டை என்ற கிராமத்தில் ஏழை விவசாயி பெற்றோர்களுக்குப் பிறந்தவர் புகழேந்தி. இவரின் ஓவிய முயற்சிகளுக்கு இளமையிலேயே உந்துதல் தந்தவர் ஆசிரியர் பசுபதிதான் என்கிறார்.

பள்ளி இறுதி வகுப்பு முடித்து, ஓவியக் கல்லூரியில் சேரவேண்டும் என தன் விருப்பத்தை தெரிவித்த போது பெற்றோர்களிடம் இருந்து எதிர்ப்பு கிளம்பியதாம். பிறகு தலைமையசிரியர், தன் தந்தையை சமாதானப்படுத்திய பிறகே கல்லூரிக்குப் போக அனுமதி கிடைத்ததாம். பின்னர் இளநிலைக் கல்லூரி வகுப்பை குடந்தை ஓவியக் கல் லூரியில் தொடங்கினார்.

1987ஆம் ஆண்டு புகழேந்தியின் வாழ்வில் ஒரு திருப்பு முனை எனலாம். கல்கத்தாவில் மாணவர்களுக்கு தேசிய அளவில் ஓவியப் போட்டி நடந்தது. அதில் சுமார் 4000 இளம் ஓவியர்களின் படைப்புகள் இடம் பெற்றன. உலகப் புகழ்பெற்ற ஓவியரான எம். எஃப் உசேன் புகழேந்தியின் "பாதிக்கப்பட்டவன் 87" (Victim 87) என்ற ஓவியத்திற்குப் பரிசளித்தார். இதுதவிர மிருணாள்சென், சப்னா ஆஷ்மி முதலியவர்களும் தன் ஓவியத்தை பாராட்டியதை புகழேந்தி நினைவு கூர்கிறார். இந்த ஓவியத்திற்காக ரூ7000/–பரிசாகப் பெற்றார். அதே கண்காட்சியில் இந்த ஓவியம் ரூ5000/– விலை போனதாம். இதே ஓவியத்திற்கு சென்னையில் நடந்த கண்காட்சியில் மாநில விருதும் ரூ2000/–மும் பரிசாகப் பெற்றார். அப்போது அவருக்கு வயது பத்தொன்பது தான்.



'பாதிக்கப்பட்டன் 87' ஓவியம், இறந்துகிடக்கும் ஒரு மனிதனைச்

சித்தரிப்பதாகும். பக்கவாட்டியில் ஒரு மனிதன் இறந்து கிடக்கிறான். அவன் உடலை மட்டும் ஒரு கோடு வெட்டிப்பிரிக்கிறது. அக்கோட்டிற்கு வெளியே கை, கால்கள் இருக்கின்றன. அவனைச் சுற்றி வேடிக்கைப் பார்க்கும் கால்கள், செருப்புகள் மற்றும் முழு ஓவியத்தை ஓவியர் இருபகுதிகள் போல கித்தானில் பிரித்துக் காட்டியுள்ளார்.

இந்த ஓவியம் எதை சித்தரிக்கிறது? வறுமைக்கு பலியானவரையா, அல்லது கலவரத்தில் பலியானவரையா, அல்லது அர்த்தமில்லாத பகைக்குப் பலியானவரையா அல்லது ஏதோ ஒரு சமூகக் கொடுமையையா என நம்மை சிந்திக்கவைத்து தனது ஓவியம் மூலம் வெற்றி பெறுகிறார் புகழேந்தி.

இந்த ஓவியத்தை ஏன் வரைந்தேன் என்று அவர் கூறும்போது "நான் கும்பகோணம் ஓவியக் கல்லூரியில் சேர்ந்த போது ஒரு நாள் என்னுடைய அறையிலிருந்து கல்லூரிக்குச் சென்றுகொண்டிருந்தேன். ஒரு வயதானவர் பட்டினியால் பிளாட்பாரத்தில் படுத்திருந்தார். அவரை யாருமே கவனிக்கவில்லை. பிறகு மாலை 4 மணிக்கு மேல் கல்லூரி முடிந்த பிறகு மீண்டும் அவரை நான் பார்த்தேன். அவர் இறந்து கிடந்தார். இந்த நிகழ்ச்சி என்னை வெகுவாகப் பாதித்தது. அன்று இரவு முழுவதும் நான் தூங்கவே இல்லை. அந்த நிகழ்ச்சியை நான் ஓவியமாக தீட்டினேன். அந்த ஓவியம் தான் 'பாதிக்கப்பட்டவன் 87 ".

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு புகழேந்தி சமூகத்தில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வையும் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தார். அது அவரைச் சமூகத்தை நேசிக்க வைத்தது. கொடுமைகளுக்கு எதிராக தூரிகையை துவக்காக மாற்ற ஆரம்பித்தார். இதற்கு இவரின் புலப்பெயர்வும் ஒரு காரணம். குடந்தையில் இளநிலை ஓவியக் கல்வியை முடித்த புகழேந்தி முதுநிலைப் படிப்பிற்காக, புரட்சித் தீ சுடர்விட்டு எரிந்து கொண்டிருக்கும் ஐதராபாத் மத்திய பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார்.

ஆந்திராவைப் பொறுத்தவரை, 'ஒரு பக்கம் புரட்சி பெருக்கும் – மறுபக்கம் மடமைப் புதைகுழிகளும்' நிறைந்தது. புகழேந்தியை கொதிக்க வைக்கும் நிகழ்ச்சி அப்போதுதான் நடந்தது.



ஆந்திராவில் நலகொண்டா மாவட்டத்தில் சலக்குருத்தி என்கிற இடத்தில் ரெட்டி எனப்படும் இந்த ஆக்க சாதியினர், பிற்படுத்தப்பட்ட ஒரு பெண்ணை நிர்வாணமாக அழைத்துச் சென்றதை கேள்விப்பட்ட ஓவியரின்

தூரிகை கோபத்தில் இயங்கியது. அதே சமயம் திரைப்படம் நடந்து கொண்டிருக்கும் போது தாழ்த்தப்பட்ட ஒருவர் உயர்சாதிக்காரர் ஒருவரின் காலை மிதித்துவிட்டதால் சுண்டூர் என்ற ஊரில் சாதிக்கலவரம் வெடித்து பல தாழ்த்தப்பட்டவர்கள் படு கொலையானார்கள். இதனால் மேலும் உக்கிரம் அடைந்த புகழேந்தி, அணிவகுப்பு (parade)என்ற தலைப்பில் பல தொடர் சித்திரங்களைத் தீட்டினார். அதில் ஓர் ஓவியத்தில் நிர்வாணமாக்கப்பட்டு, கைகட்டப்பட்ட பெண், தன் உடலை மறைத்து நிற்கிறாள். அவளின் கூந்தலை பற்றி இழுத்துச் செல்கிறான் ஒரு நிலப்பிரபு. இந்தக் காட்சியைக் கண்டும் மௌனிகளாக மக்கள் கூட்டம் இருப்பதைக் காட்ட, ஓவியத்தின் மேல் பகுதியில் அவர்களின் வக்கற்ற தலைப்பகுதியும் பிளாஸ்திரி போடப்பட்ட வாயும் காட்டப்பட்டுள்ளது. ஓவியத்தின் இடையில் செருப்பணிந்த, அணியாத கால்கள். இதன் மூலம் நவீன ஓவியம் ரியாது என்பதை உடைத்துக் காண்பிக்கிறார்.

நவீன ஓவிய உலகத்தைப் பொருத்தவரை தனிமையில் இருந்து யாருக்கும் புரியாத விதத்தில் சமூகநத்துடன் அந்நியப்பட்டு வரைந்த ஓவியத்தின் மேல் பகுதியில் அவர்களின் வக்கற்ற தலைப்பகுதியும் பிளாஸ்திரி போடபபட்ட வாயும் காட்டப்பட்டுளள்ளது.

நவீன ஓவிய உலகத்தைப் பொறுத்தவரை தனிமையில் இருந்து யாருக்கும் புரியாத விதத்தில் சமூகத்துடன் அந்நியப்பட்டு வரைந்த ஓவியங்கள் ஒரு பெரிய ஐந்து நட்சத்திர ஓட்டலில் கண்காட்சிக்காக வைக்கப்படும். அந்த நகரத்தின் பணமுதலைகள் வந்து தங்கள் திமிரைக் காண்பிப்பதற்காக அதிக விலை கொடுத்து வாங்கிச் செல்வதும், அந்த படைப்பை பற்றிய அறிவே இல்லாமல் அதை வீட்டில் முடக்கி வைப்பதுமே வழக்கம். இதை புரட்சிகர ஓவியர்கள் முறியடித்து வந்துள்ளனர். இந்த வழக்கத்தை எதிர்த்து நரசிங்கராவ் என்ற கலைஞன் தனது திரைப்படமான 'ரங்குல கலா' (வண்ணக் கனவு) வில் கதாநாயகனான ஓவியன் தனது ஓவியங்களை நகரத்தின் மையத்திலுள்ள பாலத்தின் மேடையில் காட்சிக்கு வைத்திருப்பார். பொதுமக்கள் வந்து தங்கள் கருத்தை கூறுவார்கள்.

ஆந்திராவில் இருந்ததாலோ என்னவோ புகழேந்தி, இந்த வகைப்பட்ட முறையில் தமிழகத்தில் தனது கண்காட்சியை நண்பர்கள் ஒத்துழைப்புடன் நடத்தினார்.

அப்போது காவிரிநதி நீர்ப்பிரச்சினையால் பல்லாயிரம் தமிழர்கள் கர்நாடகத்திலிருந்து அகதிகளாக சொந்தநாட்டிலே சோகத்தை அனுபவித்த கொடுமையான சோகத்தை இவரின் ஓவியங்கள் சித்திரித்திருந்தன. இந்நிகழ்வை தஞ்சை பெரிய கோவிலை அடுத்துள்ள இராசராசன் சிலையருகிலுள்ள பூங்கா நடைபாதையில் ஸ்டீல் நாற்காலிகளின் மேல் ஓவியங்களை வைத்து தற்காலிக ஆர்ட் காலரியை உருவாக்கினார்.

ஐதராபாத்தில் 91 – இல் நடைபெற்ற மதக்கலவரத்தில் நூற்றுக்கணக்கானோர

இறந்தனர். இதைக் கண்டித்து கலைஞர்கள், "மதவாதத்திற்கு எதிராக கலைஞர்கள்" என்ற நிகழ்ச்சியை நடத்தினர். இதில் ஓவியர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், நாடக, சினிமா கலைஞர்கள் பலரும் பங்கு கொண்டனர். இதில் புகழேந்தியும் கலந்து கொண்டு தனது படைப்பை இடம் பெற வைத்தார்.

இது தவிர இவரது படைப்புகள் அர்மீனிய பூகம்பம்; நெல்சன் மண்டேலா; சமாதனம் பற்றியும் மத்திய அரசு மாநில அரசுகளை எவ்வித காரணமும் காட்டாமல் கவிழ்க்கும் 356 ஆம் சட்ட எண்ணைக் காட்டி ஒடுக்கும் ஜனநாயக விரோதத்தைக் கண்டித்தும் தொடர் ஓவியங்கள் படைத்துள்ளார். ஈழப்படுகொலையை கண்டித்து அந்தோனிராஜ், சாம் அடைக்கலசாமி, வீர. சந்தானம் வரிசையில் புகழேந்தியும் பல எதிர்ப்பு ஓவியங்களைப் படைத்துள்ளார்கள்.

இவரது ஓவியங்களில் காணப்படும் சமூக பாதிப்புக்களின் பிரதிபலிப்பாக அகில இந்திய பரிசு, நுண்கலைக் குழு விருது, லலித்கலா அகாதாமி விருது, மற்றும் இண்டர் நேஷனில் ஏர்போர்ட் அத்தாரிட்டி விருதையும் பெற்றவர். இவரது ஓவியங்கள் சென்னை, பம்பாய், கல்கத்தா, லக்னோ, பெங்களூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சிகளில் இடம் பெற்றுள்ளன.

புகழேந்தியின் ஓவியங்கள் தமக்கென தனி இயல்பை கொண்டு விளங்குகின்றன. இது இவருக்கான புதியபாணியை வகுத்து தந்துள்ளது.

இவருடைய பாதிக்கப்பட்டவன், பலி, வரிசை ஓவியங்கள் அனைத்தும் முறுக்கேறிய உழைப்பாளிகளின் உடல்கள், தனிவெட்டுக் கோட்டுக்குள் அடக்கும் தன்மை, உருவங்கள் தனக்கேற்ப சிதைக்கும் லாவகம், கித்தானை இருபிரிவாகப் பிரித்துக் கொள்ளும் போக்கு முதலியவற்றைத் தன்னகத்தே கொண்டு தனிபாணி ஏற்படுத்தியுள்ளன.

அணிவகுப்பு, சுண்டூர் படுகொலை போன்ற தொடர்சித்திரங்களில் சிகப்பு, பழுப்பு, நீலம், வெள்ளை முதலிய நிறங்களைக் கொண்டும் முழு உருவ சித்திரிப்பும் செய்துள்ளார். இது இரண்டாவது பாணி.

புகழேந்தியின் மூன்றாவது பாணி ஓவியங்களாக ஈழப்படுகொலை, காவிரி நீர் பங்கீடு, மதவாதம் முதலிய தொடர் சித்தரங்களில் சிகப்பு, மற்றும் பழுப்பு, வண்ணங்களை அதிகமாகவும் வெள்ளை நிறத்தை குறைத்தும் வெள்ளை நிறத்தை அலறும் பற்கள் மூலமும், கொலையாளிகளின் கருவிகள் முலமும் வெளிப்படுத்துகிறார். இந்த பாணி ஓவியங்களின் கித்தான்கள் செவ்வக வடிவிலும் நிறைய காட்சி சித்தரிப்புகளையும் கொண்டவையாகக் காட்சியளிக்கிறது.

இது தவிர 'இந்தியன் இங் 'கினால் வரையப்படும் கோட்டுச் சித்திரங்கள் அனைத்தும் தமிழகத்திற்கே உரித்தான ஆதிமூலம், மருது, சந்தானம் ஆகியோரின் ஓவியச் சாயலில் இவரின் கோடுகளும் இயங்குகின்றன.

புகழேந்தி தனது ஓவியங்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, "என் படங்களை பார்த்த ஒருவர் சொன்னார். 'உங்க

படங்களை வாங்கி வீட்டுச் சுவரில் அலங்கரிக்க முடியாது போலிருக்கிறதே' என்று நானும் முதலில் அழகுணர்ச்சியால் உந்தப்பட்டு கிராமத்துக் காட்சிகளை வரைந்து கொண்டிருந்தேன். பின்னர் அங்குள்ள அவலங்களும் மக்கள் படுகிற கஷ்டங்களும் என் மனதை வருத்தத் தொடங்கியது. அதன் பிறகுதான் சமுதாயத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளை, சோகங்களை அடிப்படையாக வைத்து வரைய ஆரம்பித்தேன்.

"ஓவியனும் ஒரு பத்திரிக்கை நிருபர் மாதிரிதான், சப்ஜெக்டோடு நேரடியான ஈடுபாடு தேவைப்படுகிறது. யாரோ சொல்லுகிற நிகழ்ச்சியை வரைவதைக் காட்டிலும் அந்த இடத்திற்கே போய் நிலைமையை உணர்ந்து வரைவதில்தான் திருப்தி கிடைக்கும். என்னுடைய ஓவியங்கள் மாளிகைகளை அலங்கரிக்கும் கலைப் பொருட்கள் இல்லை. நடை பாதைகளில் இவற்றை மாட்டும் போதுதான், சொல்ல வந்த விஷயத்தைச் சேர வேண்டிய இடத்தில் சேர்ப்பித்த திருப்தி கிடைக்கிறது" என்கிறார் இந்த 27 வயது ஓவியர்.

சிட்டப்பிரசாத், தேப்ராட்டா பாட்டாச்சாரியா போன்ற புரட்சி ஓவியர் வரிசையில், இந்திய மக்களின் போராட்டங்களுக்கு ஓவியர் புகழேந்தியின் கலை வெளிப்பாடுகள் உறுதுணையாக இருக்கும் என்று நிச்சயம் நம்பலாம்.


**லில்லி தேவசிகாமணி நினைவு இலக்கியப் பரிசுகள் திட்டம்**

**கோவை**

**1993 ஆண்டில் பிரசுரமான சிறுகதை நூல்களுக்குப் பரிசு**

விதிகள்

- 1993-ல் (ஜனவரி முதல் டிசம்பர்முடிய) வெளியான சிறுகதை தொகுப்பு நூல்களை மட்டும் அனுப்ப வேண்டும்.
- ஒவ்வொரு நூலிலும் ஐந்து (5) பிரதிகள் அனுப்ப வேண்டும்.
- ஒருவரே பல நூல்கள் அனுப்பலாம். (நூல்களின் விலையை அஞ்சல் செலவுடன் மணியார்டர் மூலம் அனுப்பி வைக்கப்படும்.)
- ஆசிரியரோ, பதிப்பாளரோ, ஆசிரியரின் சார்பில் ஏனையோரோ, ஆசிரியரின் உடன்பாட்டுடன் அனுப்பலாம். பரிசு ஆசிரியர்க்குத்தான்.
- கீழ்கண்டவாறு பரிசுகள் வழங்கப்படும். முதற்பரிசு ரூ.3000. இரண்டாம் பரிசு ரூ.1500 வீதம் இரண்டு, மூன்றாம் பரிசு ரூ.1000 வீதம் நான்கு.
- ஆசிரியர், தமக்குப் பிடித்த 3 கதைகளைக் குறிப்பிட வேண்டும். அந்த 3 கதைகளை மட்டுமே நடுவர்கள் தேர்வுக்கு எடுப்பார்கள். (ஆசிரியரின் திறனை சரியான முறையில் இனம்காண இந்த ஏற்பாடு. அவ்வாறு குறிப்பிடத் தவறினால், நூலில் முதல் மூன்று கதைகளை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
- உலகில் எப்பகுதியில் வாழ்ந்தாலும், தமிழில் எழுதும் எழுத்தாளர்கள் கலந்து கொள்ளலாம்.
- தமிழகத்தின் பிரபலமான மூத்த மூன்று எழுத்தாளர்களோடு, இவ்வமைப்பின் தலைவர் மற்றும் செயலர் அடங்கிய ஐவர் குழு தேர்வு செய்யும். தலைவரின் முடிவே இறுதியானது.
- நூல்கள் வந்து சேர வேண்டிய கடைசிநாள் 31-1-1994.
- 1994 மே மாதம் 3-வது ஞாயிற்றுக்கிழமை பரிசளிப்பு விழா நடைபெறும்.
- ஏற்கனவே இவ்வமைப்பில் பரிசு பெற்ற எழுத்தாளர்கள், பரிசு பெற்ற ஆண்டிலிருந்து 2 ஆண்டுகளுக்கு போட்டியில் கலந்து கொள்ளாமலிருக்க வேண்டுகிறோம்.
- நூல்களை அனுப்ப வேண்டிய முகவரி:

**E.S. Devasigamony**
President LDM-LPS
57, Govt. Arts College Road
Coimbatore - 641 018.

# இயக்கவியலும் கலை இலக்கியமும்

– கலைச்செல்வன்

–கவனிப்பிற்குரிய முக்கிய குறிப்பு:

*இதில் எனது கருத்தியல் மிகச் சுருக்கமாகவே உள்ளது. எனது கருத்தில் உடன்பாடு உள்ளவர்களும் மாறுபட்டவர்களும் தங்கள் கருத்துக்களை எனக்கு, நான்காவது பரிமாணம் ஊடாக, எழுத்துமூலம் அறியத்தரும்படி வேண்டுகிறேன். மக்களிடமிருந்து வரும் எந்த முரண்பட்ட விமர்சனத்திலும் சரியானதை ஏற்று, தவறானதற்குப் பதில் அளிக்க இது எனக்கு வாய்ப்பாக அமையும். தேவை ஏற்படின் விரிவாக எழுதவும் பயன்படும். தவறுகளைத் திருத்தி முன்னேறுவதும், சரியானதை ஏற்று இயங்குவதும்தான் இயக்கவியல் எழுத்துக்குச் சீரிய வழி.–*

"எதனை நாம் அறியவில்லையோ, அதனை அறிய முனைவதும், எதனை நாம் புரியவில்லையோ அதனைப் புரிய அவாவுவதும், எது நமக்குத் தெரியவில்லையோ அதனைத் தேடுவதுமே அறிவு"

– ஹெகல்.

தமிழ் ஒரு மொழி. ஆனால், மொழி தமிழ் அல்ல. சிங்களம் ஒரு மொழி. ஆனால், மொழி சிங்களம் அல்ல. ஆங்கிலம் ஒரு மொழி. ஆனால், மொழி ஆங்கிலம் அல்ல. இது உன்னிப்பான கவனத்துக்குரியது. மொழிகள் மூலம் இனங்கள் கணிக்கப்படுவதால் மனிதர்களுக்குள் மொழி ஒரு வாழ்க்கைச் சாதனமாகிறது. இந்தச் சாதனம் அதிகார அல்லது ஆளும் வர்க்கங்களால் பாராதீனப்படுத்தப்படும்போது இனங்கள் பேதப்படுகின்றன. எந்த ஓர் இயக்கத்துள்ளும் வர்க்கம் சார்ந்த செயற்பாடு இருப்பதே இதற்குக் காரணம். ஆக, நாம் வர்க்க வேறுபாட்டின் தன்மைகளைப் புரியாமல் ஓர் இனத்தின் பிரச்சினைகளை ஒரு போதும் சரியாக அணுகவோ தீர்க்கவோ முடியாது. ஓர் இனத்துள்ளும் 'இரண்டு வர்க்க வேறுபாடு' இருப்பதைக் காணும் ஒருவரால்தான் இனப்பிரச்சினைகளுக்கும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் ஒரு சரியான தீர்வைக் காணமுடியும். இதுபோன்றே சகல பிரச்சினைகளையும் இயக்கவியல் சார்ந்து அணுக வேண்டும்.

மொழிகளும் மொழிகள் சார்ந்த இனங்களும் தத்தம் இனங்களடர்ந்த நாடுகளில் அல்லது பிரதேசங்களில் இயல்பு பூர்வமாகச் சமூக வாழ்வைத் தரிசிக்கின்ற சீரிய முறையாலேயே வளர்ச்சியடைகின்றன. ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் 'மனித கலாசாரத்தைப் பலாத்காரமாகவோ மறைமுகமாகவோ நயவஞ்சகமாகவோ அதிகாரபலம் கொண்டு, அல்லது

விஞ்ஞானத்திற்குப் புறம்பான 'சமயாச்சாரங்கள்' மூலம் திணிப்பதானது அந்நாட்டின் அல்லது அப்பிரதேசத்தின் ஆத்மாவையே நச்சுப்படுத்துவதாகும். யாழ்ப்பாணத்துச் 'சாதியம்' இவ்வாறே தோன்றியது. ஒல்லாந்தரும் போர்த்துக்கீசரும் தம் அதிகாரத்துவ முறை மூலம் இலங்கைக் கரையோரம் உள்ள மக்களை மதம் மாற்றி ஓர் இனத்தின் தனித்துவத்தைப் பேதப்படுத்திய வரலாறு இதற்கு உதாரணம். மதம் மாறித் தமிழ் இனத்தைக் காட்டிக் கொடுத்த கிறீஸ்தவர்களையே சங்கிலியன் எதிர்த்துப் போராடினான். போர்த்துக்கீஸ் – ஒல்லாந்து ஆளும் வர்க்கத்துக்கு அப்போராட்டத்தையும் காட்டிக் கொடுத்தபோது சங்கிலியனால் வெட்டி வீழ்த்தப்பட்டவர்களையே, 'வேதசாட்சிகளாக மரித்தார்கள்' என்று மதங்களால் புகழாரம் சூட்டப்பட்டது. சங்கிலி அரசன் வரலாறு ஒரு வர்க்கம் சார்ந்து இயக்கம் பெற்றதையும், மதங்கள் எந்த வர்க்கம் சார்ந்து செயற்பட்டன – செயற்படுகின்றன என்பதையும் இதன் மூலம் அறியலாம். இவ்வாறுள்ள நாடுகள் தம் இயல்பு வாதத்தை முற்றாக இழப்பதோடு ஒரு போலியான வாழ்க்கை முறையின் கலாசாரத்திற்கும் அக்கலாசாரப் பண்பாட்டிற்கும் தள்ளப்படுகின்றன. இந்த அவல நிலைக்குத் தள்ளப்பட்ட மனிதர்களின் சமூகவாழ்வியல்பு கடைசியில் ஒரு 'சம்பிரதாயம்' என்றாகிவிடுகிறது. இப் பொய்யான சம்பிரதாயமுறை சமூகவியல்புக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். இதனால் யதார்த்த வாழ்வு நோக்கிற்கும் சம்பிரதாயக் கலாசாரத்திற்கும் முரண்பாடு தோன்றுகின்றது. உண்மையில் சம்பிரதாயம் வாழ்க்கையல்ல; வாழ்க்கை சம்பிரதாயமுமல்ல. சம்பிரதாயம் வாழ்க்கையானால் அந்த வாழ்க்கை முழுப் போலியாகிவிடுகின்றது. இந்தப் போலித்தனப் பொய்மை வாழ்வின் பலவீனத்தையே சகல மதக் கலாசாரங்களும் பயன்படுத்தி ஆளும் வர்க்கங்களின் அதிகாரங்களுக்கு அதிகார பலம் சேர்க்கின்றன. இதனை இந்தியா இலங்கை போன்ற நாடுகளிலும், உலக முதலாளித்துவ நாடுகளிலும், இஸ்லாமிய மதம் சார்ந்த நாடுகளிலும் பார்க்கலாம். இந்த உண்மையினூடாக வாழ்வை நோக்கும் போதுதான் மொழி, கலை, இலக்கியம், கலாசாரம், அரசியல், தத்துவம் என்பன இயக்கவியல் சார்ந்து அல்லது மாறுபட்டு இருப்பதை அவதானிக்க முடியும். இவ்வாறே சகல படைப்புத் துறைகளும் கணிக்கப்படுகின்றன.

சகல படைப்புகளும் கருத்துக்களும் இதனால் தோற்றுவிக்கப்பட்டவை. கற்பனாலோகமும் மனிதனால் தோற்றுவிக்கப்பட்டதே. மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட இப்படைப்புகளின் வடிவங்களும் கருத்தியலும் மனிதகுல முன்னேற்றத்திற்குப் பயன்பட வேண்டுமாயின், இவை சமுதாய இயல்பினூடு யதார்த்த பூர்வமாக வெளிப்பட வேண்டும். கலை இலக்கியங்களானவை உருவத்தில் மாத்திரமன்றி, அவற்றின் உள்ளடக்கத்திலும் இயக்கவியல் அம்சம் கொண்டிருந்தால் மாத்திரமே சிறப்படைகின்றன. கற்பனாவாதக் கருதுகோள்களாலோ, சமயக் கலாசார யாத்திரையாலோ, நிதர்சன உலக வாழ்க்கைப்

பிரச்சினைகளை ஒரு போதும் யதார்த்தபூர்வமாகப் பார்க்கவோ தீர்க்கவோ முடியாது. இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்க 'ஓமகுண்டம்' வளர்த்தவர்களையும், 'பிரார்த்தனை' செய்தவர்களையும் விஞ்ஞான உலகப் பெரியார்களும், கிறீஸ்தவ ஆயர்களும், இஸ்லாமியக் கோட்பாட்டாளர்களும் கலை இலக்கிய அரசியல்வாதிகளை முந்திக் கொண்டு 'ஞானப்பிரமுகர்' களாகி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வெளிக்கிட்ட கோலம் அல்லது நோக்கம் இதை மேலும் புலப்படுத்தப் போதுமானது. கற்பனாவாதக் கருத்துருவவாதிகளால் நிஜ உலக வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு ஒரு போதும் தீர்வுகாண முடியாதது மட்டுமல்ல, மேலும் சிக்கல்களையே தோற்றுவிப்பார்கள் என்பதும் இதன் மூலம் நிரூபணமாவதைப் பார்க்கலாம்.

அண்மையில் அயோத்தியில் ராமர் பஜனை மடாலயத்தினர் மசூதிகளை வலு சந்தோஷமாக இடித்து ஆயிரக்கணக்கான மக்களைப் பலி எடுத்த நாடகமும் உலகம் அறிந்ததே. இத்தகையோரை அரசியலுக்கும் சமூகப் பிரச்சினைகளுக்கும் கலை இலக்கியத்துக்கும் நுழையவிட்டு, முழுச் சமுதாயத்தையே வணிகமயமாக்கிவிட்ட வர்க்கம் எது என்பதைக் கண்டு கொள்வதில்தான் இதன் உண்மையான அர்த்தம் புலப்படும். ஆக, உருவமும் உள்ளடக்கமும் இயல்புவாதமாக இணைந்த யதார்த்தபூர்வக் கலைகள் உத்துயர்வதற்கான இயக்கவியல் சார்ந்த ஆய்வைத் தேடினால் மட்டுமே, சமூகவியல் வாதக் கலை இலக்கியம் அரசியற் சித்தாந்தம் ஆகிய துறைகள் சரியாக உருவாக முடியும்.

மொழியின் சிறப்பு அது உள்வாங்கியிருக்கும் இலக்கணத்தில் எவ்வாறு தங்கியிருக்கிறதோ, அவ்வாறே கலை இலக்கியம் அரசியற் தத்துவங்களின் சிறப்பும் அவை கொண்டிருக்கும் கருத்துருவம் என்னும் உள்ளடக்கத்தில் தங்கியிருக்கிறது. உருவம் உள்ளடக்கம் என்னும் அழகியல்பற்றி ஆழ்ந்த சமூகவியல் விமர்சகர்களான சிதம்பர ரகுநாதன், கே. பாலதண்டாயுதம், நா. வானமாமலை, கா. சிவத்தம்பி, திரு. தோத்தாரி, க. கைலாசபதி, இ. முருகையன், பொன்னீலன் போன்றோர் முழுமையாக விளக்கியிருப்பதால் இங்கே ஒறுப்பாகவே குறிப்பிட நேர்கிறது.

மனிதர்கள் தம் கருத்துக்களையும் தேவைகளையும் பரிமாறிக் கொள்வதற்கான சாதனமாகத் திகழும் மொழி, அதன் சமூகவியல்புகளினூடாகப் பரிணாமம் பெறும் சீரிய கருத்துருவங்களால் மட்டுமே அர்த்தமும் ஆளுமையும் கொள்கின்றது. மொழியின் வளமும் சிறப்பும் அதன் 'பெருமை'யில் ஒருபோதும் தங்கியிருக்கவில்லை. அது சங்கமித்திருக்கும் சமூகத்தின்பால் கொண்டுள்ள ஆழ்ந்த கருத்துக்களை வெளியிடும் போதுதான் சிறப்படைகின்றது. 'சிங்களம் மட்டும்' சட்டத்தின் மூலம் தமிழ் மொழிக்குள்ள உரிமையை மறுப்பதால் சிங்கள மொழி சிறப்போ வளர்ச்சியோ அடைவதற்கில்லை. சிங்களச் சட்டம் வரமுன் யாழ்ப்பாணப் பிரதேசங்களிலும் சிங்களப் பாடசாலைகள் இருந்தன.

ஏராளமான தமிழ் மாணவர்கள் சிங்களம் படித்தார்கள். அதுபோல் சிங்கள மாணவர்களும் கணிசமாகத் தமிழ் படித்தார்கள். சிங்களச் சட்டம் வந்தபின் சிங்கள மொழி வளர்ச்சி தடைப்பட்டது. ஒருமொழியின் வளர்ச்சி அடுத்த மொழியின் வளர்ச்சியிலும் உய்த்துயர்கிறது என்னும் கருத்தியல் ஆளுமை பெறாமையே இனப் பிரச்சினை தலையெடுக்க ஏதுவாகிறது. ஆளும் வர்க்கம் இதற்கு மாறாகத் தன் கருத்தியலை இப்படித் தக்கவைத்திருப்பதன் நோக்கமே, அதற்கென்று ஒரு வர்க்கத் தன்மை இருப்பதேயாகும். இவ்வாறு மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட கலை இலக்கியம் மொழி என்பன மனித குலத்தை முழுமையாக உய்விக்கச் சேவகம் செய்வதேயன்றி, மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட கற்பனாலோக ஆஷாடபூதிகளுக்குத் 'தொண்டு' புரிவனவல்ல. நாம் வாழும் சமூக நிலைப்பாட்டுக்கு மாறாகவும் மனித கலாசாரத்திற்கு விரோதமாகவுள்ள சமயாச்சாரங்கள் மனித இயல்புக்குள்ள மானிடத்தைப் பேதப்படுத்தி, நாடுபூராவும் ஊழிக்கூத்தாட வைத்திருப்பதையும் அவதானிக்கலாம். மொழியின்பால் பேதப்படாத மனிதர்களை சமயக்கலாசாரங்கள் பேதப்படுத்தி ஜாதியத்தைப் பரப்பியதையும் யாழ்ப்பாணத்துச் சமூக வாழ்வு அறிவுறுத்துகின்றது. மனித வாழ்வின் இயல்புமுறையை விஞ்ஞான வளர்ச்சி அணுகவிடாமல் தடுக்கும் இயல்பற்ற இம்முறை, 'பெருமான்' களால் எப்படியெல்லாம் யாழ்ப்பாணத்து மக்களை நச்சுப்படுத்தியது - நச்சுப் படுத்துகின்றது என்பதற்கு இது சான்று.

இவ்வாறாகவுள்ள நமது மொழி, கலை, இலக்கியம், கலாசாரம், பண்பாடு என்பன பற்றி நாம் 'பெருமை'ப்படுவதில் உள்ளார்த்தமாக விளங்கும் போலித்தனம் பெரும்பாலும் நம் தமிழர்களாலேயே ஓயாமல் பேசப்படுவதையும் வெளிப் படுவதையும் தமிழகத்திலும் அவதானிக்கலாம். இந்தப் போலித்தனம் விலாங்குபோல் அந்தரவாழ்வுக்குட்பட்ட நடுத்தர வர்க்கத்தாரிடமும் மிதவாதப் பூர்ஷ்வாக்களிடமும் ஒரு புற்று நோயாகப் பரவிவிட்டதால், சகல கலைப்படைப்புகளுக்கும் பெரும் காரணகர்த்தாக்களான மக்களும் யாழ்ப்பாணத்தான் என்ற நடப்பியல் வாதக்கட்டுரையில் இதனை இயல்பு நெறியோடு விளக்கியுள்ளவை மனங்கொள்ளத்தக்கது. (தொடரும்).

அடுத்த நா.ப. இதழில்
க. ஆதவன்
எழுதும்
**கந்தசாமியும் கண்மணியும்**
நெடுங்கதை
இடம்பெறும்!

# நான்காவது பரிமாணம்

கனடாவிலிருந்து

பட்டு வேட்டிப் பாவலன்
எட்டுப் பத்து நாட்களாய்
கொட்டைப் பெட்டி தட்டியே
துட்டுக் காசைத் தேடுவான்.

ஊரைச் சுற்றும் சின்னவன்
பேரில் லாத மன்னவன்
வாரி வாரித் தூற்றுவான்
மோரில் நீரை ஊற்றுவான்.

காற்றில் ஊர்ந்த உதடுகள்
ஈற்றில் காதில் வீழ்ந்தன
நூற்றுச் சொச்ச ஈட்டிகள்
ஆற்றொ ணாத காயங்கள்.

காற்று நன்கு வீசவே
தூற்றி வென்ற வீரவேல்
வீற்றி ருந்த மாளிகை
காற்றில் கஞ்ச லானது.

எட்ட நின்று பேசினான்
மட்டி லாத ஆசையால்
கிட்ட வந்து தொட்டனன்
சுட்ட தீயில் கெட்டனன்.

கட்டுப் பாட்டில் நின்றவன்
விட்டு விட்டு மீறினான்
சொட்டுச் சொட்டில் ஆழ்ந்துபின்
கட்டுப் பட்டு வீழ்ந்தனன்.

மூடக் கொள்கை என்றவன்
வீடு காடு விட்டனன்
ஆடித் தீர்ந்த டங்கையில்
மூடர் மேன்மை பாடினான்.

செல்லப் பிள்ளை காதலைக்
கொல்லத் திட்டம் தீட்டிய
வல்ல தந்தை வளர்ப்பதோ
அல்சே சன்நாய் அறிவரோ?

இயற்கை முத்தைப் பார்க்கிறார்
செயற்கை முத்தைச் செய்கிறார்
நயக்கப் புதுமை இருக்குது
வியக்கும் மரபு சிறுக்குது.

சரியும் பிழையும் மாறலாம்
அருமை பெருமை போகலாம்
உரிமை கடமை மீறலாம்
தருமம் என்றும் தருமமே.



## – கவிஞர் வி. கந்தவனம்



கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் இவ்வருடம் தனது அறுபதாவது வயதை எட்டியுள்ளார். இதன்பொருட்டு இவரைக் கௌரவிக்கும் முகமாக 20.11.93, ரொறொன்ரோவில் மணிவிழா நடந்தேறியது. 'கவிநாயகர் கந்தவனம்' எனும் நூலும், கவிஞர் கந்தவனம் மணிவிழாப் பாமலரும் வெளியிடப்பட்டன. கவிஞராகவே பொதுவாக அறியப்படும் இவர், சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், நாடகாசிரியர், கல்விமான், முற்போக்கான சிந்தனைகள் நிரம்பப்பெற்ற சமூகசேவையாளன், எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு நல்ல மனிதர்! கனடாவில் மேற்சொன்ன துறைகள் யாவும் இவரால் பயன்பெற்று வருகின்றன. மரபு மீதான பற்றுதலும் புதுமையிடத்து இவர் காண்பிக்கும் ஆவலும்தான் இன்னும் இத்துறைகளில் இவர் பிரகாசிக்கக் காரணம் எனலாம். கவிஞர் அவர்களின் பல்துறைப் பங்களிப்பும் எமது சமூகத்துக்குத் தொடர்ந்தும் நீண்ட காலம் கிடைக்க வேண்டும் என்று நான்காவது பரிமாணம் அவாவுறுகின்றது! அவரை வாழ்த்துகின்றது!!

– ஆசிரியர்

# சரியான கணக்கு

நான் எஸ். எஸ். ஸி. (சிரேஷ்ட தராதரப்பத்திர) வகுப்பிற் படித்துக்கொண்டிருந்த காலம். சைவசமயம், எண்கணிதம், தமிழ் இலக்கியம் சைவப்புலவர் வல்லிபுரம் அவர்கள் எங்களுக்குப் படிப்பித்தார்கள். புலவருக்குப் பிரியமான மாணவனாக நான் இருந்தபோதும், என்மீது ஒரு மனக்குறையும் அவருக்கு இருந்து வந்தது. சமயபாடம் படிப்பிக்கும் வேளைகளில் எரிச்சலுடன் சில தருணம் அது வெளிப்படும். கம்பராமாயணம் பாடம் நடந்தாலும் அது கூர்மைப்படும். ஒரு தினம் கம்பனின் பாடலை விளக்கிக்கொண்டிருக்கும் போது, "கம்பரஸம் (அண்ணாதுரையின் நூல்) படித்துவிட்டாயா?" என்று கேட்டார். தப்பித்துக் கொள்வதற்காக "இல்லை" என்று நான் பொய் சொன்னேன். அந்தப் பருவத்தில் தி. மு. க. நூல்களே எனக்கு வேதங்கள். சைவப்புலவரால் எப்படி அதை ஜீரணிக்க முடியும்!

பின்னர் ஒரு நாள் சமயபாட வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. கௌதமரின் மனைவி அகலிகையிடம் இந்திரன் முறைகேடாக நடந்து, கௌதமரின் சாபத்துக்குள்ளான புராணக் கதையைப் புலவர் விளங்கிக் கொண்டிருந்தார். இந்திரனின் உடலில் ஆயிரம் புண்கள் (மாணவர் மத்தியில் ஆசிரியரான புலவராற் குறிப்பால் உணர்த்த முடிந்தது) சாபம் காரணமாகத் தோன்றியதும் இந்திரன் இரந்து நின்றமைக்கு இரங்கி, அவை ஆயிரம் கண்களாக்கப்பட்டன என்றும் விளக்கினார். அதன் பின்னரே இந்திரனுக்கு ஆயிரங்கண்கள் உண்டாயின என்று கதையை முடித்தார்.

நான் மெல்ல எழுந்தேன்.

புராணக்கதை சொன்ன புலவர், மெல்லிய சினத்துடன் "என்ன?" என்று கேட்டார்.

"இந்திரனுக்கு முந்தி இருந்த கண்களோடு இப்ப ஆயிரத்து இரண்டு கண்களல்லவா இருக்கவேணும் ஸேர்!" என்று கேட்டேன்.

"இரடா, மடையா! கண்டறியாத கணக்குக் கேட்கிறாய்." புலவர் என்மீது சீறிவிழுந்தார்.

நான் தலைகுனிந்த வண்ணம் மெல்ல அமர்ந்தேன்.

அடுத்த ஆண்டு அரசினர் பரீட்சையில் அதிசிறந்த சித்தியைக் கணித பாடத்தில் பெற்றவனும் நான் ஒருவன் தான்.

ங்கையிலிருந்து

## தெணியானின் தரிசனங்கள்


நூல் விமர்சனம் நா.ப.வில் இடம்பெற வேண்டும் என விரும்புவோர் தகுந்த விமர்சனக் கட்டுரையுடன் நூலின் பிரதி ஒன்றையும் சேர்த்து அனுப்புங்கள். தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

நா.ப.வின் புதிய முகவரியை கவனத்தில் கொள்ளுங்கள் –

Nankavathu
**PARIMANAM**
**1565 Jane St**
**P.O. Box 34515**
**Toronto, Ontario**
**Canada M9N 1R0**
Fax: (416) 249 3516

# நான்காவது (துயரப்) பரிமாணம்

ஒன்று:

**பத்தாவது பரிமாணம்**

'பத்தாவது பரிமாணம்' வந்திற்று.
ஜூலை 1993இல் '83 ஜூலைஇற்குப்பின்
பத்தாண்டு முடிவும் வந்திற்று.
அண்டவாரம்பத்தில்
ஆரம்பமானது நான்காவது பரிமாணம்
பத்தாவது 'நான்காவது பரிமாண'
அட்டையிலும் வந்தது
ஒரு 'நான்காவது பரிமாணம்'
கபாலத்தைக் கட்டி அழுகிற
அந்த
நான்காவது பரிமாணத்துக்கு
என்ன பெயர்?
சோகோ சோக சோகத்தின் உச்சமா?
போதாது எவ்வார்த்தையும்..!!
அந்தப் பரிமாணத்துக்கு
எங்கப்பா பெயருளது?



இரண்டு:

**அம்மா எனைத் தத்தெடு**

அம்மா!
கபாலத்தைக் கொண்டிருந்த
உடலத்தை இனி நீ
காணாய்...
எங்கிதுவென்றும் நானறியேன்...
கபாலத்தை
உயிரோடு உள்ளாய்க் கொண்டிருந்த
உடலத்தா(ள்)ன் உனக்கு
உறவென்னவென்றும் நானறியேன்...
ஒன்று மட்டும் அறிவேன்
அம்மா!
உனக்கு நான் மகனாகி
என் உயிர்க் கபாலத்தை
உயிரோடு
நீ
கட்டியணைக்கும் கணம்
வரையாவது
இந்த உலகம்
உயிரோடு இருக்க வேண்டும்.

- அளவெட்டி சிறீசுக்கந்தராசா -

கனடாவிலிருந்து

மீரா சுப்ரமண்யம் - கனடாவிலிருந்து

சினிமா சினிமா சினிமா சினிமா

# வள்ளி

சினிமா என்பது ஓர் அழகுக்கலை என்பதும் - அந்த அழகுக்கலை வெறும் பொழுதுபோக்கு ஊடகம் என்பதுவும் இப்போதைய நிலையில் சர்ச்சைக்குரிய விசயமே.

சினிமா என்கின்ற விலையுயர்ந்த அழகுக் கலையினூடாகப் படைப்பாளி தனது மனவெளிப்பாட்டை பார்வையாளனின் மனதில் ஊட்டுகின்ற அல்லது திணிக்கின்ற நிலைக்கு இன்றைய தமிழ் சினிமா (பலவந்தமாய்) தள்ளப்பட்டதில் பிரசார அடிப்படையில் தீமையே அதிகம்!

பக்தி, காதல், வன்முறை, அகிம்சை, அரசியல், முற்போக்கு, சீர்திருத்தம், பாலியல் என்று சகலதையும் மக்களிடம் சினிமா மூலம் சேர்ப்பித்த நிலைமைமாறி, ஏழு கோடி தமிழ்நாட்டு மக்களின் 'தலைவிதி'யைத் தீர்மானிக்கும் ஒரு மாபெரும் சர்ச்சையாகப் பத்திரிகைகளால் ஜோடிக்கப்பட்டு, இன்று ஆம் அல்லது இல்லை என்கின்ற ஒற்றைப் பதிலுக்காக ஒரு சினிமா உற்பத்தி செய்யப்பட்டு இருக்கிறது என்றால், அந்த மக்களின் அறியாமையையும் படைப்பாளிகளின் சுரண்டலையும் சுட்டிக் காட்ட வேறு உதாரணம் எதுவும் வேண்டியதில்லை.

தமிழ்நாட்டு மக்களின் (சூப்பர்) ஸ்டார் ரஜினிகாந்த், அரசியலில் நுழைவாரா? மாட்டாரா? என்று நான்கு வருடங்களாகப் பத்திரிகைகள் நடாத்திய பட்டிமன்றத்திற்கு 'வள்ளி' தீர்ப்பு சொல்லும் என்று பரபரப்பாகப் பேசப்பட்டது. வள்ளி வெளியானதும் 'அவர் அப்படி ஒண்ணும் சொல்லல்லியே. தத்துவம்தான் சொன்னாப்புல...' என்று இப்போது வாலைச் சுருட்டிக் கொள்வதுமாக இருக்கின்றன, சகல பத்திரிகைகளும்.

எந்தவித சர்ச்சையையும் உண்டு பண்ணாமல் 'இது வெறும் சினிமா' என்கின்ற விளம்பரத்துடன் வள்ளி வெளிவந்திருப்பாளேயானால், படத்தின் தன்மை மிகமிக பிரமாதப்பட்டிருக்கும். படம் பார்க்கின்ற பொழுது உன்னதமான படைப்பை அழகுணர்ச்சியுடன் ரசிக்கின்ற திருப்தி உண்டாகி இருக்கும். ஆயினும் கூட பெரிய ஏமாற்றம் இல்லை சுமார் பதினைந்து ஆண்டுகால அபிப்பிராயத்தை உடைத்து, அதைப் பிரமிப்பாக்கியிருக்கின்றார், ரஜினிகாந்த் இந்திய அரசியல் சட்டத்தின் மீதும் அரசியல்வாதிகள் மீதும் தனக்கிருக்கும் அருவெறுப்பை ரஜினிகாந்த் மாதிரி இதுவரை எந்த வசனகர்த்தாவோ இயக்குனரோ காட்டவில்லை என்றே கூறத் தோன்றுகிறது.

"கதர் சட்டை போட்டவனெல்லாம் காந்தியவாதி, பேசத்தெரிஞ்சவனெல்லாம் அரசியல்வாதி ஜி (செம தூள் தலைவா!) இந்த ஒரு வசனத்திற்காகவே எத்தனை பேர் பழனி போய் மொட்டை போட்டார்களோ?

காந்தி சிலைக்குக் கீழ் நின்று பேசும் ரஜினிகாந்த் கூடவே 'இனிமே கதாநாயகன் எல்லாம் நாட்டோட தலைவன் ஜி' என்ற ஒரு கொசுறு வசனத்தையும் இணைத்து செம போடு போட்டிருக்கலாமே! அப்படி அவர் போட்டிருந்தால் நாம் உடனேயே முடிவு எடுத்திருக்கலாம் "ரஜினி அரசியலில் நுழையமாட்டார்ஜி என்று!

நாம் எல்லோரும் நடிகர்களாம். நம் ஒவ்வொருவருக்கும் கடவுள் ஒவ்வொரு வேஷம் கொடுத்திருக்கின்றாராம். அதை நாம் சரிவரச் செய்யும் பட்சத்தில் மாத்திரமே கடவுளிடம் நமக்கு இடம் கிடைக்குமாம்! ரஜினிகாந்த் முடிவில் சொல்லுகின்ற தத்துவம் இது. (ஆமா, ரொம்பப் புதிசு!)

ரஜினிகாந்திற்கு கடவுள் கொடுத்த வேஷம், வேஷம் போடுவது. அடுத்தது தமிழ்நாட்டுத் தலைவனாக வேஷம் கட்டுவதாகக்கூட இருக்கலாம். படத்தில் வருகின்ற உன்னதமான முதல்வரின் தோற்றம் செய்கை அனைத்தும் 'கமரா' தூரத்திலும் இருட்டிலும் இருக்கின்றபோது ரஜினி மாதிரியே உருவம் கொடுக்கின்றது. திரையில் ரஜினிகாந்த் தோன்றுகின்ற காட்சிகளில் தெய்வீக இசைவேறு. கடவுளாக வேஷம் போடுவதுகூட அடுத்த கட்டமாக இருக்கலாம்.

கதை, திரைக்கதை, வசனம் எழுதுகின்றவராக இப்போது நிஜமாகவே வேஷம் கிடைத்திருக்கிறது. இதை உன்னதமாகவும் சிறப்பாகவும்தான் தொடங்கியிருக்கின்றார். இதையே தொடந்தாரேயானால் கடவுளிடம் நிச்சயம் ரஜினிகாந்திற்கு இடம் உண்டு. (அவரது தத்துவத்தின்படி!)

வழமையான தமிழ் சினிமா கலையில் இருந்து 'வள்ளி' படம் மாறுபடுகின்றது. இருப்பினும் 'சஞ்சே'யின் கூட்டம் கிராமத்தை விட்டுத் தப்பிப்போவது சுத்த ரஜினித்தனம். இந்த இடத்தில் திரைக்கதை எழுதிய ரஜினிகாந்த் ரொம்பவும் சறுக்கிவிட்டதாகவே தோன்றுகின்றது.

தொலைதூர கமரா பார்வையும் – காட்சிச் சூழலும் ஒன்றாக இணைகின்ற பொழுதுகளில் 'தமிழ் சினிமாதானா?' என்கின்ற எண்ணம் எட்டிப்பார்க்கின்றது. இடைக்கிடை காட்சி மெதுவாய் ஊர்கின்றபோது மலையாள வாடையும் கலக்கின்றது. காட்சி இடம்பெறும் பின்னணியில் இயற்கையான சம்பவங்கள் மாதிரியே தூரத்தில் காட்சிகளை உருவாக்கிருப்பது யதார்த்தம். இயக்குனர் நட்ராஜிற்கு இது ஐந்தாவது படமாக இருந்தும்கூட, பல படங்களை இயக்கியது மாதிரியான ஆளுமை வள்ளியிலேயே ஒளிர்கின்றது.

கதை ஒன்றும் புதிதல்ல...! முன்னாள் கலிங்கமான இன்றைய ஒரிஸா மாநிலத்தில் எண்பதியெட்டு வாக்கில் மலைசாதிப் பெண்ணொருத்தியைக் காட்டிலாகா அதிகாரி ஒருவன் கர்ப்பிணியாக்கிவிட்டு ஓடவிட, பொறுத்துப் பொறுத்துப் பார்த்த பெண் பட்டணம் போய் அவன் வீட்டின் முன்பாகவே மௌனமாகப் போராட்டத்தை ஆரம்பிக்க, பெண்நிலைவாத சங்கங்களும் பத்திரிகைகளும் அவளுக்கு ஆதரவாய் போராட்டத்தில் குதிக்க, பிரச்சினை தில்லி நாடாளுமன்றம் வரை போய்விடுகிறது. பிரதமர் மூலமாய் மக்கள் நீதிமன்றம் அமைத்து, அவளுக்கு சாதகமாய் தீர்ப்புச் சொல்லப்பட்டது. ஆயினும் அந்த மலைச்சாதிப் பெண் 'இவன் தான் என் புருஷன் என்று நிருபிப்பதே என்னுடைய நோக்கம். இவனுடன் வாழ்வது அல்ல' என்றுவிட்டு மறுபடி நாட்டுக்குப் போய்விட்டாள். இந்த உண்மைச் சம்பவத்தை அதே ஆண்டில் தெலுங்கில் படமாக்கினார்கள். சிறு மாற்றத்துடன் தமிழில்கூட மொழிமாற்றம் செய்யப்பட்டது. (பார்க்க: 'மௌனப் போராட்டம்!)

இதே கதையை அதிகமான மாற்றங்களைச் செய்து ரஜினி திரைக்கதை எழுதியிருப்பது பழைய முயற்சியாகினும்கூட திறமையான முயற்சி. நிஜமான படிக்காத மலைசாதிப் பெண்ணின் மனிதாபிமானம், படித்த வள்ளி என்கின்ற கற்பனைப் பெண்ணுக்கு இல்லாதுபோனது மிகப்பெரிய குறையே.. பாவத்தின் சம்பளம் கொலையல்லவே...!

பழைய பாலச்சந்தர் படத்தில் வந்த ஸ்ரீவித்யாவின் தோற்றத்துடன் புதிய நாயகி ப்ரியாராமன். அறிமுகம் என்கின்ற பார்வை தொடக்க காட்சியிலேயே இல்லாது போய்விட்டது. சரிதான், ஆனால் ப்ரியாராமனுக்கு கனகச்சிதம். படத்தின் முக்கால்வாசிப் பாத்திரங்கள் நமக்குப் பழக்கப்படாதவை. புதிய முகங்களை வைத்து தமிழில் படமாக்குவது அதிர்ஷ்ட லாபக் குலுக்கல் மாதிரி. எடுப்போரும் பார்ப்போரும் ஏகமாய் தயங்குவார்கள். ரஜினி என்கின்ற ஆளுமை பின்னணியில் இருப்பதால் தயக்கம் தளர்த்தப்படுகின்றது.

கதைக்குச் சமனாக, நேர்கோட்டில் நகர்வது, பின்னணி இசையும் ஆர்ப்பாட்டம் இல்லாத பாடல்களும். இதுவரை வேறு எந்தப் படத்துக்கும் இல்லாத மாதிரி இளையராஜா பின்னணி இசையை, பின்னணி இசையாகவே பயன்படுத்தியிருக்கின்றார். சம்பவங்களிலிருந்து பாடல் காட்சிகள் பிரியாது ஒன்றோடு ஒன்று பின்னியிருப்பது பிரமாதம்! நட்ராஜின் தொழில் மிகச் சுத்தம்.

'புரட்சி' என்கின்ற சொல்லே வெளுத்து சாயம் போய்விட்ட பாரத நாட்டில் 'புரட்சி வரவேண்டும்' என்றும் 'அரசியல் சட்டத்தில் மாற்றம் வரவேண்டும்' என்றும், 'அப்படி வராதபட்சத்தில் தான் முதல்வராக வந்தால்கூட எதுவுமே செய்ய முடியாது' என்றும் வசனம் அமைத்து, உன்னதமான முதல்வர்மூலம் சொல்லவைத்து 'ஜகா' வாங்குவது ரஜினியின் பேடித்தனம்!

ஏதோ, தமிழ்நாட்டின் தலை எழுத்தை நிர்ணயிப்பது தாய்க்குலங்கள்தான் என்பது கன்னட சிவாஜிராவ்விற்கு தெரியாதா என்ன?(!) என்னதான் இருப்பினும் வள்ளி என்ற சினிமா மூலமாவது நல்லதொரு அரசியல் தலைவரைப் பார்த்த திருப்தி அவர்களுக்கு மிஞ்சட்டும்!

கனடாவிலிருந்து

நூல் அறிமுகவிழாவில் –

# சாகா இலக்கியம் எழுப்பிய சர்ச்சை!

– ஒரு நிகழ்ச்சி விபரக் குறிப்பு

## – சிவகுமார் செல்லத்துரை

நான்காவது பரிமாணம் அந்த விழாவை ஏற்பாடு செய்திருந்தது. இரண்டு நூல்களின் அறிமுகவிழா, அது. '**கதிரேசனின் சிறுவர் பாடல்கள்**' ஒன்று; **அகஸ்தியரின் 'எரிநெருப்பில் இடை பாதை இல்லை'** என்ற நாவல் மற்றது. அமரர் கதிரேசர்பிள்ளை தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியின் தமிழ்ப் போராசன்; கவிஞர்; நாடகாசிரியர்; இன்னும், பல துறைகளும் கைவரப்பெற்ற ஒரு நல்ல கலைஞர். அந்நாட்களில் அவர் சிறுவர்களுக்காக எழுதிய பாடல்களைத் தொகுத்து, கவிஞரும் எழுத்தாளருமான அவரது மகன் க. **ஆதவன்** டென்மார்க்கிலிருந்து இந்த நூலை வெளியிட்டிருக்கிறார். அகஸ்தியரைப் பற்றி சமகால இலக்கிய ஈடுபாட்டாளர் எவரும் அறிவர். இன்றைய ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்தின் மூத்த படைப்பாளி; முற்போக்குப் பாசறையின் 'மேய்ப்பர்'களுள் ஒருவர் என்றுகூட அவரைச் சொல்லலாம். எழுபதுகளை எய்திக்கொண்டிருக்கும் இவர், இன்று பாரிஸில் வசிக்கின்றார். இலக்கியம் தான் இன்னமும் இவருக்கு உயிர் மூச்சு. சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னர் இவர் எழுத ஆரம்பித்த நாவல் தான் இப்போது 'எரிநெருப்பில் இடைபாதை இல்லை' என்ற பெயருடன் பல தடைகளையும் தாண்டி வெளிவந்திருக்கின்றது. இந்த இரண்டு நூல்களையும் கனடாவிலுள்ள தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்துவைத்து உதவும் நோக்கத்துடன் நான்காவது பரிமாணம் இந்த விழாவை ஏற்பாடு செய்திருந்தது.

கடந்த அக்டோபர் 17ஆம் திகதி, ரொறொன்ரோவிலுள்ள தமிழர் கூட்டுறவு இல்ல மண்டபத்தில் பி. ப. 3.30க்கு விழா ஆரம்பமானது. **கவிஞர் அ. கந்தசாமி** விழாவுக்குத் தலைமை தாங்கினார். 'எங்களுக்கென்றொரு மண் வேண்டி' எழுந்த போராட்டத்தினால், விலைமதிப்பற்ற உயிர்களை இழந்து போனவர்களுக்கென, இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. **செல்விகள் கௌரி பாஸ்கரன், குமாரி பாஸ்கரன்** சகோதரிகளது தமிழ் வணக்கப் பாடல்களைத் தொடர்ந்து வரவேற்புரை இடம்பெற்றது. யாழ். புகையிரத நிலையத்தின் முன்னாள் அதிபரும் இலக்கிய ஆர்வலருமான

*"சாதாரண மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட படைப்புக்களே சாகா வரம்பெற்ற இலக்கியங்களாக நிலைத்து நிற்கும்" – கவிஞர் அ. கந்தசாமி*

**மு. கதிர்காமநாதன்** நான்காவது பரிமாணத்தின் சார்பில் சகலரையும் வரவேற்றார். தலைமையுரையில், முற்போக்கு வட்டாரத்தினரின் வருகையின் பின்னரே ஈழத்து நவீன தமிழ் இலக்கியம் வெளியுலகாரின் கணிப்பினைப் பெறத் துவங்கியமையையும், சமூக அடித்தளத்தில் இருந்து வந்த படைப்பாளிகள், சாதாரண மக்களின் அன்றாட சமூகப் பிரச்சினைகளைச் சுற்றி இலக்கியம் படைக்க ஆரம்பித்தமையையும், ஈழத்து முற்போக்கு அணியைச் சார்ந்த காத்திரமான இலக்கிய விமர்சகர்கள் பின்பற்றிய 'மக்கள் இலக்கியக் கோட்பாடு' தமிழ்நாடு ஈறாக முக்கியத்துவம் பெறத் துவங்கியமையையும் ஆதாரங்களுடன் அ. கந்தசாமி விளக்கினார். "சாதாரண மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட குமுதத்தில் சுஜாதாவினால் விதந்துரைக்கப்பட்ட, கி. பி. அரவிந்தனின் 'முகம் கொள்' கவிதைத் தொகுதியைத் தொட்டுக் காட்டினார். அத்தொகுதியிலுள்ள கவிதைகளுள் வெளிநாடுகளில் வாழும் இன்றைய சராசரி ஈழத்தமிழன் ஒருவனது பிரிவு, அலைவு, தனிமை, தோல்வி, இழப்பு, அவமதிப்பு, ஏக்கம், ஏமாற்றம், துயரம் என்பன தான் விரவிக் கிடக்கின்றன எனக் கூறிய அவர், இவை யாவும் சாதாரண மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுடன் சம்பந்தப்படாதவை எனக் கூறுவதைக் கவனமாகத் தவிர்த்துக் கொண்டார். கவிஞர் கதிரேசர்பிள்ளையுடனான தனது உறவுகள் தொடர்புகளை மீள நினைவூட்டிய இவர், "கதிரேசனின் சிறுவர் பாடல்களை கனடாவிலுள்ள பிள்ளைகளும், அகஸ்தியரின் நாவலை இங்குள்ள பெற்றோரும் கட்டாயம் படிக்கவேண்டும்" எனக் கூறினார்.

**கலாநிதி வசந்தகுமார், கவிஞர் சிவா**

> *"அன்பு, கருணை, பாசம், நேசம், காதல், வீரம் என்பவற்றைக் கருப்பொருளாகக் கொண்ட படைப்புக்கள் தான் காலத்தால் சாகாதிருக்கவல்லன" – கவிஞர் வி. கந்தவனம்*

படைப்புக்களே சாகா வரம்பெற்ற இலக்கியங்களாக நிலைத்து நிற்கும்" என அவர் கூறியதுடன் விழா களைகட்டத் தொடங்கியது.

இரண்டு நூல்களையும் அறிமுகம் செய்து வைத்த மகா ஜனா கல்லூரியின் முன்னாள் அதிபர் **பொ. கனகசபாபதி**, 'சாகா வரம்பெற்ற இலக்கியம்' பற்றித் தலைவர் சொன்ன கருத்தை மறுப்பது போல, அண்மையில் **சின்னத்தம்பி** ஆகியோர் நாவலினதும், **திருவாளர்கள் பாலேந்திரா, லோகன் கணபதிப்பிள்ளை, சாந்திநாதன்** ஆகியோர் கவிதை நூல்களினதும் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

அடுத்து, கதிரேசனின் சிறுவர் பாடல்கள் பற்றிப் பேச வந்த **கவிஞர் வி. கந்தவனம்**, 'சாகாவரம் பெற்ற இலக்கியம்' பற்றிய அ. கந்தசாமியின் கருத்தை வன்மையாக மறுத்துரைத்தார். பாரதி அன்று

பாடிய விடுதலைப் பாடல்களே இன்று காலத்தால் செத்துப் போனவை தான் என உதாரணம் கூறி, "அன்பு, கருணை, பாசம், நேசம், காதல், வீரம் என்பவற்றைக் கருப்பொருளாகக் கொண்ட படைப்புக்கள் தான் 'காலத்தால் சாகாதிருக்கவல்லன" என வாதிட்டார். கதிரேசருடன் தான் பழகிய நாட்களையும், அவருள் மறைந்து கிடந்த கலாபூர்வமான ஆளுமையின் பரிமாணங்களையும் பழைய நிகழ்வுகளூடாக வெளிக் கொணர்ந்தார். இந்த நூல் தயாரிப்பில் இடம் பெற்றுள்ள சில தவறுகளைச் சுட்டிக் காட்டி, சிரமங்களுக்கு மத்தியிலும் இந்நூலை வெளியிட்ட ஆதவனைப் பாராட்டி, கனடாவில் இதனை மீள் பிரசுரம் செய்ய நான்காவது பரிமாணம் முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இவரது கருத்துக்குப் பதிலிறுத்த தலைவர் அ. கந்தசாமி, "நாங்கள் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் அகஸ்தியர் எழுதிய இந்த நாவல், இன்று தேவைதானா எனச் சிலர் கேட்கக் கூடும் – ஆனால் நான் சொல்வேன்– இந்த நாவலுக்கான தேவை இன்றும் எமது சமூகத்தில் எந்த விதத்திலும் குறைந்ததாக இல்லை – காரணம் எமது சமூகம் இன்னமும் திருந்திவிடவில்லை.... அன்று தன் சொந்த பந்தங்களின் மூர்க்கமான எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் துணிச்சலுடன் இந்த நாவல் மூலமாக அகஸ்தியர் ஏற்றி வைத்த சிறு தீப்பொறி, ஜுவாலைவிட்டு எரிந்து, இன்றுவரை ஈழ மண்ணிலும் –வெளிநாடுகளிலும் எம்மவர் மத்தியில் புரையோடிப் போயுள்ள சாதி வியாதியை அது சுட்டெரிக்க வேண்டும்; அதற்கு நாங்கள் எல்லோம் ஒத்துழைக்க வேண்டும்" என்று ஒலித்த

> *"சாகாவரம் பெற்ற இலக்கியம் எது என்பதைத் தீர்மானிப்பவர்கள் நாங்கள் அல்ல; அதனை நான்காவது பரிமாணம் அல்லது காலம் தான் தீர்மானிக்க வேண்டும்" – கவிஞர் உ. சேரன்*

அயலானிடம் அந்த அன்பு, கருணை, நேசம் காண்பிக்கத் தவறிய காரணத்தால் தான் எமக்குள் ஏராளமான இத்தனை பிரச்சினைகளும்........." என்று ஆரம்பித்து, சாகாவரம் பெற்ற இலக்கியம் பற்றிய தன் கருத்தை மீண்டும் வலியுறுத்தினார்.

இந்த அறிமுகவிழாவுக்கென்று டென்மார்க்கிலிருந்து, க. ஆதவன் எழுதி அனுப்பியிருந்த செய்தியை **சியாமளா நவரத்தினம்** வாசித்தார். அதனைத் தொடர்ந்து, நாவல் பற்றிய கருத்துரையை எழுத்தாளர் . **வசந்தன்** வழங்கினார். "சுமார் சபா வசந்தனின் குரலில், மாற்றத்தை மனதார விரும்பி வேண்டி நிற்கும் புதிய தலைமுறையின் தீட்ஷண்யம் தெரிந்தது. பின்னர் விழாவில் வாசிக்கப்படவென, பாரிஸிலிருந்து அகஸ்தியர் எழுதி அனுப்பியிருந்த ஒரு நீண்ட இலக்கியக் கட்டுரையில் (08 – 11 – 93 மஞ்சரியில் அது பிரசுரமாகியுள்ளது) காணப்பட்ட சிறுசெய்தியை மட்டும் தேர்ந்தெடுத்து, **சுசீலா மகேந்திரன்** வாசித்தார்.

"இன்று ஒரு 'ஓடுகாலிச் சமூகம்' (Society on the run) ஆகிப் போன

எமது இன்றைய தமிழ்ச் சமூகம், வெளிநாடுகளில் வாழப்போகும் எமது அடுத்த தலைமுறை பற்றி மிகுந்த அக்கறையும் கவனமும் கொள்ளவேண்டும்....... இங்கு தமிழராகத் தொடர்ந்தும் நாம் வாழ விரும்பினால் தமிழ்மொழி அடுத்த தலைமுறையூடாக வளர வேண்டும்........ அதற்கு 'கதிரேசனின் சிறுவர் பாடல்கள்' போன்ற நூல்கள் நிச்சயம் பயன்படும்" என்று அந்நூல் பற்றிக் கருத்துரை வழங்கிய **கவிஞர் சேரன்** குறிப்பிட்டார். "எனது தமிழ், இந்துசமய ஆசிரியரும், எனது நண்பர் ஆதவனின் தந்தையுமான கதிரேசர்பிள்ளையின் பாடல்களில் காணப்படும் எளிமையும் நளினமும் அவற்றின் பிரதான சிறப்பம்சங்கள்...... இந்த நூல் காலத்தின் தேவையை ஒட்டி வெளிவந்த ஓர் ஆரோக்கியமான முயற்சி" எனக் கூறிய சேரன், "எமது சமூகத்துக்கு இன்று வேண்டப்படாத, பழைய, சாத்தியமற்ற கருத்துக்களை – ஒருவித வகைமாதிரிப்படுத்தல் (Stereotype) போன்று, இன்றைய படைப்புக்கள், வெளியீடுகளில் வெளிக் கொணர்வதைத் தவிர்த்தல் வேண்டும்" எனக் குறிப்பிட்டு, இந்த நூலில் இடம்பெற்ற "பூதனும் பொந்தில் கிளியும்" என்ற பாடலை அதற்கு ஓர் உதாரணமாகச் சுட்டிக் காட்டினார். 'சாகாவரம் பெற்ற இலக்கியம்' என்ற சர்ச்சை பற்றிச் சேரன் குறிப்பிடும்போது – "சாகாவரம் பெற்ற இலக்கியம் எது என்பதைத் தீர்மானிப்பவர்கள் நாங்கள் அல்ல; அதனை நான்காவது பரிமாணமான காலம் தான் தீர்மானிக்க வேண்டும்" என்றும் "இலக்கியம் என்பது மானுடத்தின் படிமங்களைத் தீட்டுகிறது – அது உண்மைக்கு உரு தருகிறது அல்லது உண்மையை உருவாக்குகிறது. அது மானுடத்தின் படிமங்களைத் தீட்டவேண்டும் என்று நான் சொல மாட்டேன்" என்றும் கூறினார்.

அகஸ்தியரின் நாவல் பற்றிக் கருத்துரை வழங்கிய செந்தாமரை ஆசிரியர் **டி.பி.எஸ். ஜெயராஜ்,** நகைச்சுவையுடன் தனது பேச்சை ஆரம்பித்து, சபையை உற்சாகப் படுத்தினார். பின்னர் அந்த நாவல் எழுத ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் அது நூலுருப் பெற்றுவந்த இன்றைய நாள்வரை அந்த நாவலுக்கும் அதன் ஆசிரியரான அகஸ்தியருக்கும் ஏற்பட்ட சோதனைகளை ஒவ்வொன்றாக விபரித்தார். இயங்கியல் அடிப்படையில் பல வரலாற்றுச் சான்றுகளுடன் நாவலின் பின்னணியை அணுகி ஆராய்ந்தார். பிரச்சினைகளின் தீர்வுக்கான அணுகு முறைகள் பற்றிக் குறிப்பிடும்போது, "நற்குணம், துர்க்குணம் என இரு வகைப்படுத்தப்பட்ட குணாதிசயங்களைக் கொண்ட கதாபாத்திரங்களை மட்டும் உருவாக்கி நடமாடவிட்டு, கதையை நகர்த்திச் செல்லும் அகஸ்தியர், அராஜகமான வழி முறைகளினால் சமூக சீர்கேடுகளை களைந்தெடுக்க முற்படுதல் வெற்றியளிக்கக்கூடிய முறையல்ல எனக் கூறுகின்றார். ஆயினும் நாவலின் முடிவில், நடேசபிள்ளை என்ற துர்க்குணம் கொண்ட கதாபாத்திரத்தை, அதே அராஜகமான முறையினால் அழித்துவிடுகின்றார். இது கதாசிரியரின் முரண்பாடான கருத்து

நிலையைக் காட்டுகின்றது. இதன் மூலம் எமது சமூக வியாதிகளுக்கு எந்தப் பரிகாரம் பொருத்தமற்றது என்று கூற முன்வந்தாரோ, அதனையே ஈற்றில் ஆதரிக்கின்றாரோ என்ற ஒரு மயக்கம் ஏற்படுகின்றது" எனக் கூறிய ஜெயராஜ், "இன்று பாரிஸில் நோய் வாய்ப்பட்டிருக்கும் அகஸ்தியர் குணமடைந்து, இது போன்ற சமூகப் பயன்பாடு மிக்க நல்ல படைப்புக்களை, அவரது வெளிநாட்டு அநுபவங்களூடாகவும் எமக்குத் தரவேண்டும் என வாழ்த்தி—தன் எதிர்பார்ப்பினை வெளிப்படுத்தி விடை பெற்றார்.

'போராட்டத்தின் விளைவாக ஈழ மண்ணிலும், புதிய வாழ்க்கைச் சூழ்நிலைகளால் வெளிநாடுகளிலும் எம்மவர் மத்தியில் சாதி இன்று ஓரளவு செத்துவிட்டது' என்று கவிஞர் வி. கந்தவனம் முன்னர் தன் பேச்சின் போது கூறியிருந்த கருத்தை, கூட்டத்தின் தலைவர் அ. கந்தசாமி, பொ. கனகசபாபதி, சபா வசந்தன் ஆகியோர், வெளிநாடுகளிலேயே தமக்குக் கிடைக்கப் பெற்றிருந்த நேரடி அனுபவங்களைச் சொல்லி அந்தக் கருத்தை மறுத்துரைத்தனர். அத்துடன் தமிழ்ச் சமூகத்தினை வேரறுத்துக் கொண்டிருக்கும் சாதிப் பிரச்சினையை அடியொற்றி அகஸ்தியரின் நாவல் அமைந்திருந்ததனாலும், அன்றைய விழாவின் பெரும்பகுதி 'ஒரு சாதி ஒழிப்பு மாநாட்டின் சாயலைக் கொண்டிருந்ததோ' எனவும் எண்ணத் தோன்றியது.

ஈற்றில் நன்றியுரை கூறிய எழுத்தாளர் **சக்கரவர்த்தி**, மரபுவழி வந்த நன்றியுரையைத் தவிர்த்து — கூட்டு மொத்தமாகச் சம்பந்தப்பட்ட சகலருக்கும் நன்றி சொல்லி — "பயன்மிக்க இலக்கியக் கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்து தந்த நான்காவது பரிமாணம் குழுவினரான எங்களுக்கு நீங்கள் தான் நன்றி சொல்லவேண்டும்" என சபையோரிடம் வேண்டி முடித்து வைத்தார்.

புலம்பெயர்ந்து வாழ்ந்துவரினும் இன்னமும் எமக்கிடையே ஒருவகை இலக்கிய தாகம் அல்லது ஈடுபாடு இருந்து வருவதனை அன்றைய விழாவிலிருந்து அவதானிக்க முடிகிறது என விழாவில் கலந்துகொண்ட பலரும் திருப்தி தெரிவித்தனர். வெளிநாடுகளில் வெறும் கேளிக்கைகளிலும் களியாட்டங்களிலும் பொழுதினைப் போக்கிக் கொண்டிருக்கும் பெரும்பாலான தமிழர் மத்தியில், இவ்வாறான ஆரோக்கியமான இலக்கிய நிகழ்வை ஏற்பாடு செய்திருந்த நான்காவது பரிமாணம் வெளியீட்டுக் குழுவினரை நிச்சயம் பாராட்டலாம்.


## நூல்களைப் பெற்றுக்கொள்ள —

கதிரேசனின் சிறுவர் பாடல்கள்
C. ADHAVAN
PRIORENSGADE -32 -1TH
5600 FAABORG
DENMARK

எரிநெருப்பில் இடைபாதை இல்லை
S. AGASTHIAR
9 RUE GALLERON
75020 PARIS
FRANCE

# வாழ்தலில் எனக்குப் பிரியமேயில்லை

மனிதம் மறந்து சவமாய்க் கிடந்து.........

தமிழ்நாட்டிலிருந்து

சிலிர்க்கும் மழைச்சாரல் தெறிக்க
தவளைகள் பின்னணி இசைக்கும் இரவு.
குளிர் மிகுந்து கொடுகுமென்னுடல்
உனது இனிய அணைப்புக் கேங்கும்.
பிரிதலின்றி கழிந்த பொழுதுகள்
கனவாய் மட்டுமே உணர்த்தும் கொடுமையை
எப்படி உன்னிடம் சொல்வேன்.

நெரிசல் நிறைந்த சென்னை நகரில்
எனது உணர்வை எனது கிளர்வை
எனது நேசத்தை எனது காதலை
எனது விரல்களின் மெல்லிய வருடலை
எங்ஙனம் உனக்கு உணர்த்த முடியும்?

புறாவும் அன்னமும் தூது செல்லும்
காலமா இது -
தென்றல்கூட இளமையிழந்து
மௌனமாய்....

மானுட நேயம் நோக்கிய வாழ்வை
படைத்திட முயல்தலில் எத்தனை தடைகள்
கொடூரம் மிகுந்த விழிகள் தொடர
வாழ்தலின் கசப்பு நெஞ்சை நெருடும்.
மனிதம் மறந்து சவமாய் கிடந்து
வாழ்தலில் எனக்குப் பிரியமேயில்லை.

**– செல்வி**

சிறுகதை

# சரியாய்க் கொப்பரை மாதிரி.........!

கனடாவிலிருந்து



ஆச்சி
கூறிய அடக்கத்துக்கு
இலக்கணமாய், இரு கால்களையும்
ஒரு புறமாய் மடித்து, ஒரு கையை
விழுதாய் உடலைத் தாங்கவிட்டு,
விழிகளைத் தரையில் வீழ்த்தி...

அவளை எனக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. அவளுடன் தனியே பேசவேண்டும். அண்ணியிடம் முணுமுணுக்கிறேன். 'அலையாதே', அண்ணி பார்வையால் படபடக்கிறாள்.

வாழ்க அண்ணி. இவ்வளவு விரைவில் தனியே சந்திப்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டாள். "அவள் வலு ஷ்ரூட்" அண்ணை அடிக்கடி புகழ்ந்துகொள்வது பிழையில்லைத் தான்.

அலங்காரம் ஒன்றும் அதிகமில்லை, மிகமிகச் சாதாரணம். 'என்னைத் தனியே சந்திப்பதில் இவளுக்கு அவ்வளவு அக்கறையில்லையோ?' இதயத்தின் ஓரமாய் சிறிது இடித்துக்கொண்டது. 'இல்லை இவள் ஏழை அதனால்தான்'.... எண்ணிக் கொண்டது மனம். சற்று நிம்மதி. இரு இருமல், ஒரு செருமல் இவற்றுக்குப் பின்னால் வார்த்தை வலுவிழந்து, "எனக்கு உங்களைப் பிடிச்சுக்கொண்டுது". மேற்கொண்டு ஒரு சொல்கூட என்னால் பேச முடியவில்லை. என் கறுத்த முகம் கூட வெட்கத்தால் சிவந்துவிட்டது. எஞ்சியிருந்த கொஞ்சத்

சபா வசந்தன்

துணிவையும் எட்டிப்பிடித்து அவளை நிமிர்ந்து பார்க்கிறேன்.

அவள் முகத்தில் எந்த உணர்வுமில்லை. மனம் மீண்டும் சங்கடப்பட்டுக்கொண்டது.

'அவள் ஒரு, குடும்பப் பாங்கான பெட்டை, அதனால் தான் எந்த ஆசைகளையும் அவளால் வெளிக்காட்டிக் கொள்ள முடியவில்லை' என் மனதே என் மனதைத் தடவிவிட்டுக் கொண்டது. மேலே தொடர்கிறேன்.

"கலியாணத்துக்கு முதலில என்னைப்பற்றி நான் கொஞ்சம் சொல்ல வேண்டியிருக்கு. நான் கொஞ்சம் வித்தியாசமான ஆள். கனக்க விசயங்கள் எனக்குப் பிடிக்காது. இஞ்சை கனடாவுக்கு வந்தவுடன எங்கட பெட்டையள் கனபேர் அடக்க ஒடுக்கம் இல்லாம, கண்டமாதிரி எல்லாம் உடுப்புப் போட்டுக்கொண்டு அப்பிடி இப்பிடித் திரியினம், 'பார்ட்டியில' எல்லாம் ஆம்பிளையளோட சேர்ந்து 'டான்ஸ்' ஆடினம். எனக்கு அதுகளைப் பாத்தால் விசர் தான் வரும்"

சட்டென்று என் பேச்சை நிறுத்திக் கொண்டேன். என் அண்ணி கூட 'பார்ட்டி'யில எல்லாம் 'டான்ஸ்' ஆடுவாள். அண்ணை ஒண்டுமே சொல்லாமல் சும்மா பாத்துக்கொண்டிருப்பார். இழுத்துப் போட்டு நாலு சாத்துச் சாத்தாமல்? என் கோபம் கண்களினூடே தெரிந்தது. அவளை நிமிர்ந்து பார்த்தபடியே மேலே தொடர்கிறேன்.

"ஆனால் எனக்கு அந்தப் பிரச்சினை வராது எண்டு நினைக்கிறன். உம்மைப் பாத்தால் நல்ல அடக்கமான குடும்பப் பிள்ளை மாதிரித் தெரியுது".

– ஒரு சிறு புன்முறுவலுடன் அவளைப் பார்க்கிறேன். ஏதோ அவளுடன் சற்று நெருங்கி வந்துவிட்டதாக ஒரு உணர்வு. வெட்கம் என்னிடமிருந்து விடைபெற்றுக் கொண்ட போதும், வார்த்தைகள் அதிகமாக வரவில்லை. இவள் என்ன ஒண்டுமே சொல்லாமல் நிக்கிறாள். ஒரு வேளை பேச வராதோ? இல்லை, இல்லை கொஞ்சம் திமிர் பிடிச்சவள் போல கிடக்கு. எனக்கு விசராகக் கிடந்தது. ஏதோ துணிவில் அவளுடன் தனியாகக் கதைக்க வேண்டும் என்று கூறிவிட்டேன். ஆனால் இப்போது எதைக் கதைப்பதென்றே தெரியவில்லை. இந்தக் கலியாணத்தைப் பேசி வந்த அண்ணையின் நண்பர் சொன்னது நினைவில் வந்தது.

"அதுகள் எல்லாம் நல்ல படிச்ச குணமான பெட்டையள்; ஆனால் கொஞ்சம் கஷ்டப்பட்ட குடும்பம்; சீதனம் அது இது எண்டு அதிகமாக எதிர்பாராதேங்கோ."

"எங்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும் தானே, நாங்கள் எதைச் செய்தாலும் நியாயமாய்த்தான் செய்வம்."

அண்ணை நண்பனிடம் அளந்த போது, மூன்று இலட்சம் காசாகவும், முப்பது பவுன் நகையுமாக வந்த அண்ணி உள்ளே நின்று புறுபுறுத்தாள். – "அது சரி உடையாற்ற பிள்ளையளுக்கு கதையில மட்டும் குறைச்சலில்லை". – அண்ணையும் உடனே அடங்கிப் போய்விட்டார்.

அண்ணையும் அண்ணியும் நடந்து கொள்ளும் முறை எனக்குக்

கொஞ்சம் கூடப் பிடிக்காது. அண்ணி அடிக்கடி வாதாடுவாள். அண்ணையும் விட்டுக் கொடுப்பார். இருவரும் வேலைக்குப் போவார்கள். வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் சமமாகக் கவனிப்பார்கள், சில வேளைகளில் விடுமுறை நாட்களில் அண்ணை காலையில் எழுந்து உடுப்புகள் அலம்பி, வீடு கூட்டிச் சமைக்கத் தொடங்குவார். அண்ணி இன்னமும் படுக்கையில் இருப்பாள். இதையெல்லாம் பார்த்தால் எனக்குப் பத்திக் கொண்டு வரும். சீ, என்ன கேவலம் – பொம்பிளை படுத்திருக்க, ஆம்பிளை எழும்பிச் சமைக்கிறது! கேட்டால் பரஸ்பர புரிந்துணர்வு என்பார்கள். அவர்கள் இருவரும் திருமணமாகி எட்டு வருடங்கள் ஆகிவிட்டன. இருவரும் சண்டையிட்டு நான் பார்த்ததில்லைத் தான். என்றாலும் அண்ணை அடங்கிப் போவதாகவே எனக்குப்பட்டது. அண்ணி அருமையானவள். எமது குடும்பத்துக்காக எவ்வளவோ பாடுபட்டிருக்கிறாள். என்றாலும் அவள் அண்ணையைச் சிறிது ஆட்டிப் படைப்பதாக எனக்குள் ஒரு உணர்வு.

"ராசா, நீ மாமாவை மாதிரி சரியான மர மண்டையடா" – அண்ணி அடிக்கடி என்னைப் பார்த்துக் கூறுவாள். அண்ணியில் எனக்கு அன்பும், மரியாதையும் இருந்தாலும் கூட, எனக்கு வரும் மனைவி அண்ணியை மாதிரி இருக்கக் கூடாது எனப் பல முறை எண்ணிக் கொள்வேன்.

"உங்கட பேர் என்ன?" – ஏற்கனவே அவளின் பெயர் தெரிந்தாலும் கூட அவளைப் பேச வைப்பதற்காகக் கேட்கிறேன். "சீ, என்ன மடத்தனமான கேள்வி, என்னைப்பற்றி என்ன நினைப்பாள்?" அங்கலாய்த்துக் கொண்டபோது அவள் அமைதியாகக் கூறினாள்.

"தேவகி"

பெயர் கூட எனக்குப் பிடித்துப் போயிருந்தது. மனது சிறிது குதூகலித்தது. எனது கற்பனையில் செதுக்கி வைத்திருந்த என் எதிர்கால மனைவியில் முக்கால்வாசிப் பங்கை தேவகி கொண்டிருந்தாள். நான் விரும்பிய படி நீண்ட தலைமுடியில்லை. உச்சி வகிடெடுத்து தலை சீவாமல் ஒரு பக்கவாட்டாகச் சீவியிருந்தாள். கலியாணத்துக்குப் பிறகு அவளை மாற்றிக் கொள்ளச் சொல்லலாம். என் மனதோ மிகவும் மகிழ்ந்து கொண்டது. அவளை என் அருகே நிறுத்திச் சோடிப் பொருத்தம் பார்த்துவிட வேண்டும் என அடித்துக்கொண்டது. காலம் தாழ்த்தாது உடனே திருமணம் செய்துவிட வேண்டும் என அவதிப்பட்டது.

"சாதகம் கூட, நல்ல பொருத்தம் எண்டு சொல்லிச்சினம், நல்ல காலம் சாதகம் பொருந்தாவிட்டால் எங்கட அப்பர் அம்மாவை கடைசி வரைக்கும் சம்மதிச்சிருக்க மாட்டினம்."

"உண்மை தான். மனசு பொருந்தாவிட்டால் கூடப் பரவாயில்லை. ஒரு மாதிரி ஆசையைக் காட்டி, இல்லாவிட்டால் பயப்பிடுத்திக் கட்டிவைச்சுப் போடலாம்."

முதல் முறையாக வாயைத் திறந்து அவள் பேசியது இந்த வக்கிரமான

வார்த்தைகள். அவள் கண்களில் கடுமை தெரிந்தது. முகம் கல்லாயிருந்தது. எனக்கு அவள் பேச்சின் ஆழம் தெரியவில்லை.'கட்டப் போறவனோட முதல்முதல் கதைக்கிற கதையே இது'. எனக்கு எரிச்சலாகக் கிடந்தது. என்றாலும் அவள் கூறியதை விளங்கிக் கொள்ளாதவன் போல மேலே தொடர்கிறேன்.

"ஏதோ உம்மட நல்ல காலம், சீதனத்தில் அவ்வளவு இறுக்கமாக இருக்காதேங்கோ எண்டு அப்பாவும் எழுதியிருந்ததால, இந்தச் சம்பந்தம் கெதியில சரிவந்திருக்கு; எனக்கும் ஓரளவுக்கு உம்மைப் பிடிச்சிருக்கு; நல்ல சீதனத்தோட பேசி வந்த எத்தினையோ சம்பந்தங்களுக்கு மாட்டன் எண்டு சொன்ன நான், இதுக்கு ஓம் எண்டிட்டன்".

நான் சிறிது அழுத்தமாகவே கூறிவிட்டு அவளை நிமிர்ந்து பார்த்தேன். அவளது கண்களும் உறுதியோடு என்னைச் சந்தித்தன. இதழோரத்தில் இகழ்ச்சிப் புன்னகையொன்று ஒடியிருந்தது.

"என்னை ஏன் உங்களுக்குப் பிடிச்சிருக்கு..?" – அவள் மிகச் சாதாரணமாகக் கேட்டாள். இதழோரப் புன்னகை இன்னுமிருந்தது. "நாங்கள் இரண்டு பேரும் இதுக்கு முதல் சந்திச்சதில்லை, பழகினதில்லை, கலியாணம் கட்டுற அளவுக்கு ஒருத்தரைக் கண்டவுடன பிடிக்கிறதெண்டால், அந்தப் பிடிப்பில அர்த்தம் இருக்கிறதாக எனக்குத் தெரியேல்லை."

எனக்கு அண்டமெல்லாம் அக்கினித் திராவகம் பட்டதுபோலப் பத்திக்கொண்டு வந்தது. – 'என்னடி உதில நிண்டு விண்ணாணக் கதையெல்லாம் கதைச்சுக் கொண்டு நிற்கிறாய்? ஏதோ தின்ன வழியில்லாததுகள் எண்டு பாவத்துக்கிரங்கிப் பாத்தால், அவளின்ர கதையைப் பார்! பெரிய எஸ்டேற் ஓனர் எண்ட நினைப்பு.' – எனக்கு வந்த விசுருக்கு வெளிப்படையாகவே கேட்டுவிட நினைத்தேன். எமது குடும்பத்தில் எவருமே பொம்பிளையளுக்கு அடங்கிப் போகிறவர்கள் இல்லை. அண்ணையைத் தவிர! எங்களை நிக்க வைச்சு எந்தப் பொம்பிளையுமே கேள்வி கேட்டதில்லை. உடையார் பரம்பரையின் தன்மான வழித்தோன்றல் நான். நான் என்ன கோதாரிக்கு இவளைப் பிடிச்சிருக்குதெண்டு முதலில சொன்னன்?' – எனது பிழையான ராஜதந்திர நகர்வை எண்ணி, எனக்குக் கோபமாகவும் வெட்கமாகவும் இருந்தது. முகத்தை உம்மென்று வைத்தபடி அவளுக்குப் பதிலொன்றும் கூறாமல் மெல்ல நிமிர்ந்து பார்க்கிறேன். எனக்குக் கோபம் வந்தால் வாய் திக்கும். பேச வராது. நீண்ட மௌனத்தை அவளே கலைத்தாள்.

"கலியாணங்கள் எப்படி நடக்க வேணும் எண்டு எனக்குள்ள சில விதிமுறையள் இருக்கு. கலியாணம் கட்டப் போகிற இருவருக்குள்ள இருக்கிற அன்பும், பிடிப்பும் அந்தஸ்து, பணம் இவையளுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேணும். ஆண், பெண் இருவருடைய தனித்துவத்தையும் இருவருமே ஏற்றுக் கொள்ள வேணும். என்ர எதிர்காலத்தைப் பற்றி எனக்குள்ள

எவ்வளவோ கனவுகள் இருக்கு. எனக்கெண்டு சில விருப்பு வெறுப்புகள் இருக்கு. அதையெல்லாம் ஒரே நாளில உதறி எறிஞ்சு போட்டு, காலம் பூராவும் உங்களுக்குப் பணிவிடை செய்யிறதுக்கும், உங்களுக்காக என்னை முழுசாக மாற்றிக் கொள்ளுறதுக்கும் நான் தயாராக இல்லை. உங்களின்ர ஆணாதிக்கக் குணாம்சத்திற்காக நான் உங்களைக் குறை சொல்லேல்லை. ஏனெண்டால் எவ்வளவோ வருசக்கணக்காக எங்கட சமூகம் பக்குவப்படுத்தி, பாதுகாத்து வந்த பிற்போக்குத் தனங்களின்ரை முழுப் பிரதிநிதியாக உங்களை ஆக்கியிருக்கு. பெண்களை நீங்கள் மனைவியாகப் பாக்குறதுக்கு முதல், மனுசராகப் பாக்க வேணும்".

தேவகி சற்று பேச்சை நிறுத்திவிட்டு, திரும்பி எங்கோ பார்த்தபடி நின்றாள். அவளுடைய முகத்தில் இருந்த உறுதி மறைந்து, கவலை படர்ந்துவிட்டது போல இருந்தது. அவள் மீணடும் பேச ஆரம்பித்தபோது என்னை நிமிர்ந்து பார்க்க முயற்சிக்கவில்லை. மிக மெதுவான குரலில் அமைதியாகக் கூறினாள்.

"உங்களில எந்தத் தனிப்பட்ட கோபமும் எனக்கு இல்லை. அதே நேரம் கலியாணத்துக்காக முன் பின் தெரியாத ஒருவருடைய நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு, ஏதோ ஒன்றுக்கும் இயலாதவளாகத் தலையாட்டுறதுக்கு என்ர தன்மானம் இடம் குடுக்கேல்லை. எனக்கு தன்னம்பிக்கை இருக்கே தவிர, தாழ்வு மனப்பான்மை இல்லை. ஆனபடியால் தயவுசெய்து என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ. அது மட்டுமில்லை. இந்தக் கலியாணம் ஏன் குழம்பினது எண்டு ஆராவது கேட்டால், எனக்குப் பெட்டையைப் பிடிக்கேல்லை எண்டு சொல்லுங்கோ. உங்கட நல்ல எதிர்காலத்துக்கு என்ர வாழ்த்துக்கள்."

தேவகி கூறிவிட்டு திரும்பி விறுவிறுவென்று நடக்கத்தொடங்கினாள். எனது நிலையை என்னால் விவரிக்க முடியாது. குப்பையைக் கிளறும் கோழி கூடக் கொத்த மறுக்கும் புழுவாக, நான்.

'திமிர் பிடிச்ச வே......., நீ எப்பிடிக் கலியாணம் கட்டுறாய் எண்டு நான் பாத்துக் கொள்ளுறன்ரி; உன்னை நான் அவமதிச்சு அழிக்கேல்லை எண்டால், நான் உடையாருக்குப் பிறக்கேல்லை.'

எனக்கு அவமானத்தால் கண்கள் கலங்கிவிட்டிருந்தன. இதயம் இதோ வெளியில் வந்துவிடும் போல வேகமாக அடித்துக் கொண்டது. இந்த அனுபவம் எனக்கு முற்றிலும் புதிது. 'நான் ஒரு ஆம்பிளை. அதிலும் உடையாற்ற மகன். எவ்வளவு வசதியான பெருமையான குடும்பம். கேவலம் அவள் ஒரு பொம்பிளை, அதுவும் ஒரு பள்ளிக்கூட வாத்தியாற்ற மகள். ஊராக இருக்கவேணும் இதுகளை வீட்டோடையே கொளுத்தியிருப்பம். இவளவைக்குத் தெரியாது எங்களைப் பத்தி. சொந்தத் தமயன்ரை செத்த வீட்டுக்குச் சொல்லாமல் போனதுக்காக அம்மாவைப் போட்டு அப்பர் அடிச்ச அடி.......!

எனக்கு உடனே அப்பாவைப் பார்க்கவேணும்போல இருந்தது. அப்பா அடிக்கடி சொல்லுவார்:

"ராசா, கொண்ணனை மாதிரி

நீயும் மசியின்ரை சீலையைப் பிடிச்சுக் கொண்டு திரியாமல், நீயாவது ஆம்பிளையா உடையாற்ற உண்மையான வாரிசாக இரடா; அப்பதான்ரா இந்தக் கட்டை வேகும்".

'சீ, இதை அப்பர் கேள்விப் பட்டால் என்ன பாடுபடுவார். ஊரில அண்ணை கலியாணம் கட்டேக்குள்ள அப்பர் பொம்பிளை வீட்டாரை சுட்டு விரலால ஆட்டிப் படைச்சவர்.'

'அது ஒண்டுமில்லை. உதுகளுக்கு வெளிநாட்டுக்கு வந்திட்டம் எண்ட திமிர். இந்த அறுவான்களும் வசதி வாய்க்காலுக்கு வழியில்லாததுகள் எண்டு பாக்காமல், எல்லாரும் கனடாவுக்கு வாங்கோ எண்டு கதவைத்திறந்து விட்டுட்டாங்க. ஏதோ பெரிய கொம்யூனிஸ்ட் மாதிரித் தத்துவம் எல்லாம் கதைச்சிட்டுப் போறாள் வே........'

ஒருவாறு என்னைச் சுதாகரித்துக் கொண்டு வீட்டுக்கு நடக்கத் தொடங்கினேன். 'இப்ப வீட்டை போய் என்னத்தைச் சொல்லுறது?'

"இந்தக் கலியாணம் ஏன் குழம்பினது எண்டு கேட்டால், எனக்குப் பெட்டையைப் பிடிக்கேல்லை எண்டு சொல்லுங்கோ." அவள் கூறியது ஈட்டியாக எனக்குள் இறங்கியது. வெற்றி கொண்ட எதிரியை மன்னித்து விடும் போர்வீரனைப் போல,'என்னடி எனக்குப் பிச்சை போட்டுட்டுப் போறாய்'.

நான் மிகவும் கேவலப்பட்டுக் குறுகிப் போய்விட்டேன். "ஏன் இந்தக் கலியாணம் குழம்பினது எண்டு ஆராவது கேட்டால்...." மீண்டும் மீண்டும் இந்த வார்த்தைகள் பயங்கரமாக என்னுள் வந்து மோதிக்கொண்டன. என் மிருக உணர்வைத் தட்டி எழுப்பிவிட்டன. 'ஆராவது தூள் அடிக்கிற கறுவலைப் பிடிச்சால், மொன்றியலில் நடந்த மாதிரி, இவளையும் றோட்டில வச்சு நாய் மாதிரிச் சுட்டுத் தள்ளலாம், ஏன் எங்கட பொடியளே சிலவேளை செய்வாங்கள்'. என் மனம் விகாரமாகத் திட்டமிடத் தொடங்கியது. 'என்னடி உனக்குக் கனக்க கனவுகள் இருக்கோ? எல்லாத்தையும் பகல் கனவாக்கிக் காட்டிறன். இருந்து பாரடி'.

எதிரில் தெரிந்த மனிதர்கள் எல்லாம் என்னைக் கேவலமாகப் பார்ப்பதாக எனக்குப்பட்டது. வீட்டுக்குச் செல்லவும் எனக்கு மனமில்லை. அருகிலிருந்த பூங்கா ஒன்றுக்குச் சென்று வாங்கில் அமர்ந்து கொள்கிறேன். அந்தத் தனிமை எனக்குச் சற்று நிம்மதியைக் கொடுத்தது. உச்சியில் நின்று உல்லாசமாக ஆடியவனை ஒரேயடியாகக் குப்பையில் தள்ளிவிட்டது போல் என் நிலை.

'எல்லாம் இந்தச் சனியன் பிடிச்ச அண்ணை அண்ணியால வந்தது. இதுகளுக்கு மாப்பிளை வீடு எண்டு உசாராகக் கதைக்கத் தெரியேல்லை; அங்கை போய்த் தலையைச் சொறிஞ்சு இருக்குதுகள். அதுதான் அவளவையும் எங்களைச் சரியான சொத்தியன்கள் எண்டு நினைச்சிட்டாளவை.'

நான் தேவகியுடன் தனியே சந்திப்பதற்குக் இரண்டு நாட்களுக்கு முன் அண்ணை எனக்கு நடத்திய பிரசங்கம் ஞாபகத்திற்கு வந்தது.

"ராசா, நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேள். நீ படிச்சவன். பல

நாடுகளுக்குப் போய் பல மனிதர்களைச் சந்திச்சவன். பல அனுபவங்களைப் பெற்றவன். அந்த அனுபவங்கள் எல்லாத்தையும் உன்னையும் உன்னைச் சார்ந்த சமூகத்தையும் நல்லாக்குறதுக்காக நீ சரியான முறையில பயன்படுத்திக் கொள்ள வேணும். ஊரில எங்கட அப்பாவையும் அவரின்ர குணாம்சத்தை ஒத்த ஆக்களையும் மாதிரி நாங்கள் இன்னும் நட்டாமுட்டித் தனமாக நடக்க ஏலாது. இத்தினை வருசமாக அவையள் அந்த மண்ணை விட்டு வேற எங்கையும் போனதில்லை. எட்டடி வேலிக்குள்ள இருந்துகொண்டு உலகத்தை விசாலமாகப் பார்க்க அவையளால முடியேல்லை. ஆகவே அவை ஏன் அப்பிடி படு பிற்போக்குத் தனமாக இருந்தினம் எண்டுறதை, ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும், ஓரளவு விளங்கிக் கொள்ளலாம்."

"எந்த ஒரு சமூகமும் ஒரேயடியாக முற்போக்கான சமூகமாகவோ அல்லது வளர்ச்சியடைந்த சமூகமாகவோ தோன்றி விடுகிறதில்லை. உலகமும் மனிதனும் தோன்றி படிப்படியாக பரிணாம வளர்ச்சியடைந்து வந்த மாதிரித் தான் சமூகங்களும் நடைமுறை வாழ்க்கைக்கேற்ப, பிற்போக்குத் தனங்களைத் தவிர்த்து, சில பழக்கவழக்கங்களை மாற்றியமைத்து தங்களை மெருகூட்டிக் கொள்ளவேணும். உதாரணத்திற்கு கனடாவுக்குப் புலம் பெயர்ந்து வந்த எங்கட நிலையை யோசிச்சுப் பார். இந்தக் கனடாச் சமூகமும் எங்கட யாழ்ப்பாணச் சமூகம் மாதிரியான பிற்போக்குத் தனங்களும், குறுகிய மனப்பான்மையும் கொண்ட ஒரு சமூகமாக இருந்திருந்தால், எங்களை அகதிகளாக ஏற்றுக் கொண்டிருக்குமா? நிச்சயமாக இல்லை. நாங்கள் தஞ்சம் புக வந்த இடத்திலேயே ஒரிரு இனவாதிகள் எங்களைப் பார்த்துக் 'கறுப்பன்' எண்டு சொல்லேக்க எவ்வளவு கோபப்படுகிறம். மனித உரிமை மீறல், அது இது எண்டு எவ்வளவு குரல் எழுப்பிறம். ஆனால் எங்கட சொந்த ஊரிலேயே ஆயிரக்கணக்கான வருசங்களாகப் பிறந்து வளர்ந்து, அந்த மண்ணிலேயே உழைச்சு மடிஞ்சு போகிற, தாழ்த்தப்பட்டவர்கள் எண்டு சொல்லப்படுகிற சமூகங்களையெல்லாம் அடக்கி ஒடுக்கி அவமதிச்சு வருகிறம். சொந்த மண்ணிலேயே வெந்து சாகிற அந்த மக்களின்ரை மனநிலையைக் கொஞ்சம் யோசிச்சுப் பார்".

அண்ணை சிறிது நேரம் பேசுவதை நிறுத்திவிட்டு என்னை உற்றுப் பார்த்தபடி இருந்தார். நான் எதுவுமே சொல்லவில்லை. எனக்கு அண்ணை என்ற மரியாதை உண்டு. அதனால் ஒன்றும் பேசாமல் இருந்து கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவ்வளவு தான். அண்ணை அதிருப்திகரமாகத் தலையைச் சிறிது ஆட்டிவிட்டு மேலே தொடர்ந்தார்.

"மாற்றம் வேணுமடா ராசா, நீ கலியாணம் கட்டப் போகிற இந்த நேரத்தில நான் இதை ஏன் சொல்லுறன் எண்டால், நீ தொடங்கப் போகிறது ஒரு புத்தம் புதிய வாழ்க்கை. நீ வாழப் போகிற விதம்தான், நீ உருவாக்கப் போகிற பரம்பரையிலும் எதிரொலிக்கும். பெண்களைப் பற்றிய உன் கணிப்பும், கண்ணோட்டமும் மாற வேணும்.

குடும்பம் என்கிறது மனைவி கைதியாகவும், புருசன் காவலனாகவும் இல்லாமல், இரண்டு பேரும் உல்லாசப் பிரயாணிகள் போல வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்க வேணும். இரண்டு பேருடைய கருத்துக்கும் மதிப்பளிக்க வேணும். என்னையும் அண்ணியையும் பார். எங்களுக்குள்ள கருத்து வேற்றுமை இருக்குது. அது நாங்கள் இருவருடைய கருத்துக்கும் மதிப்பளிக்கிறதின்ர எதிரொலி. அதே நேரம், ஆளுக்காள் விட்டுக்குடுக்கிற அளவுக்கு மனப்பக்குவம் இருக்குது. அது நாங்கள் இருவரிலையும் வைச்சிருக்கிற அன்பின்ரையும், புரிந்துணர்வின்ரையும் எதிரொலி".

"அம்மாவிலயும், அப்பாவிலயும் இந்த நிலை இருந்ததா எண்டதை நினைச்சுப் பார். அண்ணியை மாதிரி ஒரு நாளாவது அம்மா சந்தோசமாக இருந்தாவா எண்டு சொல்லு. அப்பர் கோபமாக இருக்கிறார் எண்டால், எங்களை விட அந்த மனிசிதான் பாவம் பயந்து கதிகலங்கிப் போய் நிற்கும். அப்பா ஆருக்கும் விட்டுக்குடுக்காமல் தான் பிடிச்ச முயலுக்கு மூண்டுகால் எண்டு நிக்கிறதால, எவ்வளவு நாள் எங்கட முழுக்குடும்பமும் கஷ்டப்பட்டிருக்கும். நீ அப்பாவை மாதிரி இருக்க விரும்பிறதில தவறில்ல. அவரில உள்ள நல்ல குணங்களை நீ கடைப்பிடி. தகப்பனைப் போல இருக்க வேணும் எண்டதுக்காக ஒரு கொலையாளியின்ரை பிள்ளை தானும் கொலை செய்ய நினைக்கேலாது".

சிகரட் ஒன்றைப் பற்ற வைத்தபடி முகட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். நான் இன்னமும் வாயைத்திறந்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. அவர் சொன்னதொன்றும் எனக்குப் பெரிதாக விளங்கவுமில்லை. எனக்குத் தெரிந்ததெல்லாம், நான் சோரம் போகாத உடையார் பரம்பரை. அப்பாவின்ரை உண்மையான வாரிசு. எனக்கு இதில் எப்போதுமே பெருமை அதிகம்.

"ராசா, மகன் எண்ட முறையில எனக்கு அப்பாவில மதிப்பு இருக்குது; பாசம் இருக்குது. உனக்கு அண்ணன் எண்ட முறையில உன்ர நல்வாழ்க்கைக்காக உன்னை நெறிப்படுத்த வேண்டிய கடமை இருக்கு. அதே நேரம் இந்த சமூகத்தின்ர ஒரு அங்கத்தவன் எண்ட முறையில சில முற்போக்கான மாற்றங்களுக்கு என்ர பங்களிப்பைச் செய்யவேண்டிய தேவை இருக்குது. நாங்கள் மாற வேணுமடா. இல்லாவிட்டால் நிச்சயம் மாற்றப்படுவம். இது நியதி".

அண்ணையின் குரல் சிறிது தளதளத்துப் போயிருந்தது போல இருந்தது எனக்கு. 'உன்ர மனுசியை அடக்கி வைக்க உன்னால முடியேல்ல எண்டால் அதுக்கு ஏனப்பா என்னட்ட வந்து அழுது போட்டுப் போறாய்'. எனக்கு அண்ணையைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இஞ்சை கண்டாவில வேற வேலை இல்லாமல், அவனவன் எழுதியெழுதிப் புத்தகங்களாய் வெளியிடுகிறான்கள். இந்த வேலை மினக்கட்டதும் சும்மா அதுகளை வாசிச்சுப்போட்டு என்னட்ட வந்து விசர்க்கதை கதைச்சிட்டுப் போகுது.

தேவகி பேசிய தொனியும்,

அண்ணை பேசிய தொனியும் ஒத்திருந்ததாகப் பட்டது எனக்கு. 'உந்த அறுவான் தான் அவளையும் கெடுத்திருக்கிறான். எல்லாருமாகச் சேர்ந்து எனக்குத் துரோகம் பண்ணிப் போட்டியள். கூடப் பிறந்தவன் எண்டு பாத்து இனியும் உங்களோட குடியிருக்கேலாது. உடன் அப்பருக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டுட்டு வெளிக்கிட வேண்டியது தான்.'

உறுதியாகத் தீர்மானித்தபடி எழுந்திருக்கின்றேன். எல்லோரையும் பழிவாங்க வேண்டும் போல ஒரு மிருக வெறி. எனக்கு மீண்டும் உடனே அப்பாவைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. அப்பா ஒருவரால் மட்டும் தான் எனக்கு ஆறுதல் சொல்ல முடியும். அந்த ஆதங்கத்தை ஒருவாறு கட்டுப்படுத்திக்கொண்டு வீட்டுக்குச் செல்கிறேன்.

இன்று அண்ணையின் திருமண நாள். வீட்டில் நிறைய விருந்தாளிகள் வந்திருந்தார்கள். எமது ஊர்க்காரர்கள் தான். நான் உள்ளே சென்றதும் அண்ணை என்னை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

"இவனை ஞாபகம் இருக்கே உங்களுக்கு? இவன் தான் ராசா. முந்திச் சின்னனில பாத்திருப்பியள். அப்பாவோட அடிக்கடி கோயிலுக்கு வாறவன்."

வந்திருந்த ஒரு பெரியவர் என்னை அதிசயமாக அண்ணாந்து பார்த்தபடி கூறினார்.

"ஓம் ஓம், ஒரு பொடிசலாக இருந்தவன். இப்ப பார் என்ன மாதிரி வளர்ந்து, சரியாய் கொப்பரை மாதிரி..".



## நுழைவாயில்....

தர்பார் தர்மங்களை மீறி ஒரு சிலருக்காக மாத்திரம் அந்தப்புரத்தில் சிம்மாசனமிட்டு அவர்களை அமரவைத்து மனது அழகு பார்க்கிறது. இரக்கமில்லாத ராசகுமாரர்களின் தர்மத்தை மீறிய படை எடுப்புகளால் துவம்சமாக்கப்பட்ட ராணிகளைப் போல், அவர்கள் அப்புறப்படுத்தப்பட்ட பின்னரும், தடயங்களை உணர்வு, உறியிலிட்டு வைத்திருக்கின்றது.. உறிகளை கீழ் இறக்கி, தடயங்களை தடவிப் பார்க்கின்ற பொழுதுகளில் எல்லாம் மனதின் விளிம்புகளில் கதகதப்பாய் நீர் சுரக்கின்றது - கிண்ணியா வெந்நீர் ஊற்று மாதிரி.... !



கனடாவிலிருந்து



# சக்கரவர்த்தியின் அந்தப்புரம்

## பாத்திமா....!

இவள் பர்தாவுக்குள் பத்திரப் படுத்தப்பட்டிருக்கும் எரி திராவகம். முக்காட்டு முள் காட்டுக்குள் சிறை வைக்கப்பட்டிருக்கும் ஒரு ராசகுமாரி....

மும்தாஜ் பேகத்துக்கு இந்த பாத்திமா பேகம் உறவுக்காரியாக இருந்தும் கூட, தாஜ்மஹால் கனவுகள் இவளிடம் உறவு கொண்டாடியதில்லை.

சிந்தித்தல், பேசுதல், படித்தல், எழுதல் என்று அனைத்துமே தமிழ் தான் இவளுக்கு....! அதனால் தானோ என்னமோ தெரியவில்லை, இவளுக்கு கொள்ளை ஆசை, 'என்றேனும் ஒரு நாள் பர்தாவை விலத்தி, முகில்களுக்குள் இருந்து விடுபட்ட நிலவு மாதிரி நிமிர்ந்து பார்க்க வேண்டும்' என்று!

எங்கேனும் யாரேனும் காற்றைக் கட்டி வைத்திருக்கின்றார்களா?

தர்மத்திற்கு விரோதமில்லாத ஆசைகளை ஆண்டவன் அங்கீகரிப்பானாமே...! நியாயமான சுதந்திரம் தர்மத்தின் ஆசையாமே....!

"என்னைத் தெரிகிறதா?"

பழக்கப்பட்ட குரலில் – பழக்கப்படாத உருவத்துக்கு சொந்தக்காரி கேட்டபோது – வினாடிகள் கடந்து கண்டு கொண்டேன், இவள் கோதுடைத்து வெளிவந்த அக்னிக் குஞ்சென்று....!

மலர்களின் காதலன் மயங்கி விழுகின்ற அழகானதோர் கருக்கல் காலமது... களைப்படைந்த சூரியனின் கதிர்வீச்சம் முதன் முதலாய் கவலையும் இல்லாத, களங்கமும் இல்லாத அவள் முகத்தைத் தடையின்றி தடவிப்பார்த்தது.

"இது எப்படி உன்னால் சாதிக்க முடிந்தது...? மார்க்கத்துக்கு விரோதமாய் உன்னால் எப்படி இயங்க முடிகின்றது...?" என்று நான் விசாரித்த போது விறைப்பானாள்.

"மார்க்கம் மனிதனுக்கா...! மனிதனே உலகில் உயர்ந்தவன் என்பது நீ அறிந்ததில்லையா? அவனுக்காகவே அனைத்தும் என்பதே உண்மை" என்று சிட்டு இயல்பானாள்..

காற்று அவளுக்குக் கட்டுப்பட்டது; அவள் கூடவே கை வீசி நடந்தது.

நாளாக நாளாக நாட்கள் நாகரிகம் இழந்தன.......
சுவாசிக்கும் ஒட்சிசனிலும் கரி அமிலத்தின்

அளவு அதிகரிக்கத் தொடங்கிற்று....

படிப்படியாய் மூச்சுத் திணறல் அதிகரித்தது..

பலசாலி சொல்வது மாத்திரமே கருத்திற் சிறந்ததாய் கருதப்பட்டது. ஊமைகளும் குருடர்களும் செவிடர்களும் கூட அதிகரிக்கப்பட்டார்கள்.

திருவிழாத் தெருக்களில் திடீர் திடீரென தீப்பிடிக்கத் துவங்கியது.

"காத்தான்குடி பற்றி எரிகின்றது....!"

கத்தரிக்காய் விற்கப்போனவர்கள் பாதிவழியில் திரும்பி வந்து பதறிக்கொண்டார்கள்.

மயங்க வைக்காது இதயத்தை அறுத்துக் கண் முன்னே சோதனை செய்வது போன்று – அன்று அளவுக்கு அதிகமாய் உணர்வுகளில் வலி.

இறுக இரண்டு கைகளாலும் இதயத்தைப் பிடித்துக்கொண்டு போனேன், தணல் தணியத்துவங்கியதும்.

எரிந்து முடிந்த காத்தான்குடி, காற்றில் சாம்பலாய்ப் பறந்தது. நிறம் மாறி ரத்தம் காய்ந்திருந்தது, இங்கும் அங்குமாய்....

என்னைக் கண்டதும் உம்மா ஒப்பாரி வைத்தாள். "முகத்தை மூடிய ஒரு முரட்டுக் கூட்டம் பாத்திமாவின் முகவரியைக் கசக்கிவிட்டது".

காலுக்குக் கீழே பூமி பிளந்துகொண்டது.. இதயம் எகிறிக் குதித்து வெளியே பாய்ந்துவிடத் துணிந்தது.

நிமிர்ந்து பார்த்தேன்.. சந்திர கிரகணம்! முழு நிலவை மறுபடி கரிய பாம்பு, விழுங்கியிருந்தது... பாத்திமா மீண்டும் பர்தாவுக்குள் பதுக்கப்பட்டிருந்தாள்..

முகத்திரையை மாத்திரம் விலத்தி, கண நேரம் புன்னகைத்தாள்.

"தெய்வ நிந்தனை" என்றாள்.

மனித குரூரம் இவள் பார்வையில் எப்படி தெய்வ நிந்தனையாய் மறுவடிவம் எடுத்தது....?

மனதை மறைக்க, திரையால் முகத்தை மூடினாள். ஆயினும் புரிந்து கொண்டேன், கண நேரப் புன்னகையில் கவலை இருந்ததை.

அப்புறம்.........

# ASIAN SALON

## UNISEX HAIR DESIGN

அன்றலர்ந்த பூக்களைப்போல்
உங்களை நித்தம் புதுப்பிக்க
எங்களை நாடுங்கள்!



உங்கள் சாதாரண தோற்றத்தையும்
கவர்ச்சிமிக்கதாக்கும் கலை
எங்களுக்குக் கைவந்தது!

## ஏசியன் சலூன்

585 PARLIAMENT STREET
TORONTO, ONTARIO
M4X 1P9
(416) 960 3235

1233 ELLESMERE ROAD
SCARBOROUGH, ONTARIO
M1P 2X8
(416) 757 8002

உங்களுக்குச் சேவைசெய்யவென இருஇடங்களில்
காத்திருக்கின்றோம்

Canadian Pu[...]tion Mail Sales Product Agreement No. [...]775

NANKAVATHU PARIMANAM ISSN 1183-867


# MIKE'S MOTORWAY





## TRANSMISSION INC.

சேர்விஸ் ஸ்பெஷல்

தமிழ் மக்களிடையே ஒரே ஒரு ஸ்தாபனம்

# TRANSMISSION TUNE UP

Includes Transmission Fluid Change
Brand Adjustments's NEW PAN GASKET
FREE Inspection of Drive Lines
Transmission Mount-Linkages & Cooler Line
Replacing Brand New LUK CLUTCH

அநேகமாக எல்லா
வாகனங்களுக்கும்
**$34.99 + Taxes**
**$20.00 சேமியுங்கள்**

எந்தரக வாகனமாகவிருந்தாலும்
**எல்லா வித திருத்த வேலையும்**
நன்கு பயிற்சி பெற்ற தொழில்
நுட்பவியலாளர்களினால்
அதே தினம் வேலைகள்
முடித்துக் கொடுக்கப்படும்

| | |
|---|---|
| இலவச ரான்ஸ்மிஷன் பரிசோதனை<br>இலவச றோட் பரிசோதனை<br>ஒருவருட உத்தரவாதம்<br>ரோவிங் (வாகன இழுப்பு) வசதிகள்<br>மொத்தவியாபார சலுகை<br>இது ஒரு சலுகை! | இந்த சலுகை<br>மே 30, 1994<br>வரையும்<br>மட்டுமே! |




மேலதிக விபரங்கட்கு-

**MIKE – மைக்கல் அருளப்பு**

**744-8177 744-8178**

**6588 FINCH AVE WEST, REXDALE**